www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.2 திருவள்ளுவர் ஆண்டு 2051 | 14.06.2019 - 13.07.2019 | ISSN : 2195-6480




## சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு....

## கூட்டணிகளும் கூட்டுக் களவாணிகளின் அரசியலும்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

வெகு விரைவில்...



இலங்கை - இந்தியா
ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்படும்

## தரமான
# கடலுணவுகள்

அனைத்து மீன் வகைகளையும்
சுத்தம் செய்து சமையலுக்கு ஏற்ற
வகையில் துண்டுகளாக்கியும்
வழங்குகிறோம்!

ஜேர்மனி

TKS BEST FOODS

நிறுவனத்தின்
புதிய கிளை
**DOTMUND**
நகரில் ஆரம்பம்

கடல் உணவுகள் அனைத்தும் வகை வகையாக.
தொகையாகச் சில்லறையாக மிக மலிவாகக்
கொள்முதல் செய்திட வரவேற்கிறது

# TKS BEST FOODS

தமிழ் மக்கள் விரும்பும் மீன் - றால்- நண்டு - கணவாய்
என்பன எப்பொழுதும் வாங்கிடலாம்!

**வாருங்கள்! பாருங்கள்!! வாங்குங்கள்!!!**

**TKS BEST FOODS** | 0049 231 950 468 83 | 0049 231 950 468 82
Rheinische Str. 79, 44137, Dortmund Germany

tksbestfoods | tks-bestfoods@web.de | www.tks-bestfoods.de

# DER VERBESSERTE SUPER-TARIF




ortel MOBILE

ஒரே சிம்மில் இருந்து...
யேர்மனிக்கு முற்றிலும்
**இலவசம்**

**NEU: Deutschland Flat**

- 250 Minuten aus Deutschland in 50 weitere Länder
- Internet Flat ~~4GB~~ 5GB
- Surfen & Telefonieren in der EU
- Deutschland Flat

ஐரோப்பா, இந்தியா மேலும் பல நாடுகளுக்கு 250 நிமிடங்கள்

**4GB Internet**




ஐரோப்பிய நாடுகளில் இருந்து பயன்படுத்தலாம். 4GB முடிந்தால் மீண்டும் 9 யூரோக்களுக்கு பெற முடியும்

**19,99 €** [15] /4 Wochen

### Smart World L

Surfen und günstig ins Ausland telefonieren

- 250 Minuten aus Deutschland in 50 Länder
- Internet Flat bis 4 GB
- Surfen und günstig Telefonieren in der EU
- Deutschland Flat

19,99 € /4 Wochen (*)

Zur Smart World L

### Allnet Flat L

Günstig telefonieren und surfen

- Deutschland Flat
- Internet Flat 7 GB
- Surfen und günstig telefonieren im EU-Ausland

24,99 € /4 Wochen (*)

Zur Allnet Flat L

### Internet Flat L

Entspannt surfen

- Internet Flat 5,5 GB
- Surfen in der EU
- Günstig surfen in Deutschland und der EU

19,99 € /4 Wochen (*)

Zur Internet Flat L



**Nur Festnetz

AKARAM
# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14.ஆணி 2019 13 - ஆடி 2019
சுவடி / ISSUE 8.2

**தலைமை ஆசிரியர்**
திரு. த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்**
திரு. வன்னித்தம்பி

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்னை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany

Tel: 00 49 176 47 11 87 11


Email: editor@akaram.eu
ISSN 2195-6480
www.akaram.eu
No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**அன்பு நிறைந்த வணக்கம்.**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தமிழ் கத்தோலிக்க மக்களைக் குறி வைத்து நடத்தபட்டத் தாக்குதல் என்பதை எவரும் மறைக்கவோ, மறுத்து விடவோ தமிழினம் எவரையும் அனுமதித்து விடக் கூடாது. தாக்குதலை நடத்தியவர்கள் ஐ.எஸ்.ஐ. பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டு, அதனை ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பின் தாக்குதலாகப் பிரச்சாரப் படுத்தி உண்மைக் குற்றவாளிகளையும், அவர்களின் பின்னணியையும் மறைத்துவிடும் சதி இருப்பது தெரிகிறது. ஈழத் தமிழ் இனம் இன்னமும் இத்தகைய ஏமாற்று மோடி வித்தைகளால் ஏமாந்து விடக் கூடாது.



தாக்குதலை நடத்தி அடையாளம் காணப்பட்ட அத்தனை பேருமே தமிழ் பேசும் இஸ்லாமியர்கள். ஆனால், அவர்கள் தம்மைத் தமிழர்களாகவோ, தமிழ்த் தாய்மார்களுக்குப் பிறந்தவர்களாகவோ சொல்லிக் கொள்வது கிடையாது. இன்னும் ஒருபடிமேலாக தம்மை அரேபியர் என்றும், காத்தான் குடியில் ஒரு அராபிய நாடே உருவாக்கி விட்டுள்ளதைத் தற்போதைய செய்திகள் உறுதிப் படுத்தி உள்ளன.

அங்குள்ள மசூதித் தொழுகையின் பொழுது உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா 7,000 வசதிமிக்க குடும்பங்கள் வெளிநாட்டில் குடியேறப் போவதாக அறை கூவல் விடுத்துள்ளார். அவரும், அவரது ஆதரவாளர்களும் உடனடியாக கிழக்கு மாகாணத்தை விட்டு, இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்பதைத் தமிழர் தரப்பு உறுதிபடக் கூறிவிடுவதுதான் நல்லது. புலிகளோடு கொடி பிடித்து கொண்டாடிய ரவூப் ஹக்கீம் இப்பொழுது பிக்குகளுடன் சேர்ந்து வடக்கும், கிழக்கும் இணையக் கூடாது என்கிறார்.

அவரவர்களுக்கான இடத்தையும், முக்கியத்தையும் தகுந்த முறையில் தமிழ் தலைமைகள் கொடுக்கத் தெரியாமல் தலை மேல் தூக்கி வைத்துக் கொஞ்சி விளையாடிதன் பலன்தான் இன்று, தமிழன் குப்பை மேட்டில் கிடந்துத் தவிக்கும் நிலை வந்தது. இனிமேலும் தமிழ் பேசும் இஸ்லாமியர் தொடர்பான எந்த ஒரு அரசியல் கோரிக்கையையும் வைக்கும் தகுதியை தமிழ் இனம் இழந்து விட்டது. சம்பந்தனோ, சுமந்திரனோ, விக்கியோ, கஜேந்திரனோ இஸ்லாமியத் தமிழர் எனப் பேசுவதை நிறுத்திவிட்டு தமிழ் தேசிய அரசியல் மட்டுமே பேசுவதுதான் விவேகமாக இருக்கும்.

மீண்டும் சந்திக்கும் வரை,

**ஆசிரியர், அகரம் குழுமம்**





**“முஸ்லிம்களாகிய நாங்கள் இந்தநாட்டிலேதான் சிறுபான்மையினர். ஆனால், உலகில் நாங்கள் பெரும்பான்மையினர். அதை மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.”**

– காத்தான் குடியில் ஹிஸ்புல்லா.

# கூட்டணிகளும் கூட்டுக் களவாணிகளின் அரசியலும்



## நம்பி அழிந்தது நம் தமிழ் இனம் நம்பியே நாசமாவதுதான் நமது விதியா?

இன்றைய நல்லாட்சி அரசின் கூட்டுத் தலைமையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் மைத்திரிபால சிறிசேனா இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபராக 2015 ஜனவரி 8ந் திகதி தெரிவானார். நாட்டின் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கொண்ட கூட்டுத் தலைமை தெரிவாக, தமிழர் தேசியக் கூட்டணியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் சந்திரிகா குமாரதுங்காவும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்த ஒரு மகா கூட்டணி மக்கள் ஆணையைத் தேர்தல் மூலம் பெற்று, நல்லாட்சி என்கிற பெயரில், ஒரு கூத்தாட்சியை உருவாக்க, இந்தியா போன்ற அரசுகளின் தேவைகளுக்காக உருவாக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மகிந்த ராஜபக்ச என்ற கொடுமைக்காரனை மக்கள் நிராகரிக்க வேண்டும் எனப் பேசி, மக்கள் வாக்கைப் பெற்றது இந்த மகா கூட்டணி. இந்தத் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைமைக்குத் தகுதி பெற்ற மகிந்த ராஜபக்ஷ சதி செய்யப்பட்டு, அந்தப் பதவியை தமிழர் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் பெறவும், அதன் சார்பில் சபைத் தலைவரராக செல்வம் அடைக்கலநாதனும் சிறப்பு ஆறுதல் பரிசுகளைப் பெற்றனர்.

இவர்களின் ஆட்சியால் வாக்குறுதி அளிக்கப்பட்ட எந்த ஒரு மக்களின் தேவைகளையும், கடந்த நான்கரை ஆண்டுகளாக நிறைவேற்ற வில்லை என்பது ஒரு மகத்தான சாதனை. ஆனால் மைத்திரியும், ரணிலும் சம்பந்தனும் எந்த

ஒரு கவலையும் படாத ஊழல் மிகுந்த ஆட்சியைமிகச் சிறப்பாக செய்து வந்துள்ளதை நாடும் அறியும். அதனால் அடுத்தத் தேர்தல் வெற்றி பற்றிய அவர்கள் கவலை நாட்டு அரசியலில் மிகப் பெரும் பூதமாக உருவெடுத்து விட்டது.

இப்பொழுது ‘வெள்ளிக் கிழமை சந்திப்பு’ எனப்படும் பெயரில் உள்ள குடிசார் பிரஜைகள் அமைப்பு, அனைத்து குடிசார் பொது நிறுவனங்களும், ஜனாதிபதியையும், பிரதமரையும் பதவி விலகி, மீண்டும் பொது மக்களின் ஆணைக்கு இடமளிக்கக் கோரிக்கை வைக்க வேண்டும் எனக் கேட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை பல முக்கியப் பிரமுகர்கள் விடுத்துள்ளார்கள்.

நாட்டில் இலஞ்சம், ஊழல், போதை மருந்து விற்பனை அனைத்திலும் சம்பந்தப்படாத அரசியல் தலைவர்களே கிடையாது எனும் அளவுக்கு, ஆட்சி அசிங்கப்பட்டு கிடக்கிறது. புலிகளையும், தமிழரையும் அழித்துவிட்ட மமதையில் பௌத்த, சிங்கள இனவெறி அரசியல் இஸ்லாமிய மக்களை நோக்கித் திருப்பப்பட்டது. பொது பலசேனா என்கிற அமைப்பின் தலைவராக ஞானசார தேரர், பதவியை இழந்த மகிந்த ராஜபக்ஷ, அவரது தம்பி கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் பின்புலத்தில் இஸ்லாமியருக்கு எதிரானவன் முறைகளை திட்டமிட்டு நடத்தி வந்தார்.

இத்தகைய பின்னணியில் இதன் எதிர்வினையாக, இஸ்லாமிய வன்முறை அமைப்புகள் உருவாகின என்கிற தோற்றப் பாட்டை உருவாக்கும் விதமாக, இலங்கை தேசிய ஜமாத் என்கிற அமைப்பு உருவானது என்கின்றன செய்திகள். ஆனால், அதனையும் உருவாக்க மகிந்த கோத்த பாய காரணம் என்கிற செய்திகள் இப்போது வெளி வந்துள்ளன. 2014 முதலே இஸ்லாமியத் தீவிரவாதிகளை இலங்கையின் இராணுவத்தின் உளவுப் படை பணமும், பயிற்சியும் கொடுத்து வளர்த்தது என்பதும் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைகளாக வெளி வந்துள்ளன.





இலங்கை தேசிய ஜமாத் என்கிற அமைப்பின் தலைவர்கள், எல்லா முஸ்லிம் அரசியல் வாதிகளின் ஆதரவுடனும், ஆசியுடனும் பெரும் பலமும், வளமும் பெற்றதுடன், சர்வதேச இஸ்லாமியப் பயங்கரவத அமைப்பான ஐ.எஸ்.ஐ. அமைப்புடன் சிரியா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்ட அமைப்பாக விளங்குகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ம் திகதி நடத்தப்பட்ட 'உயிர்த்த ஞாயிறு' தொடர் குண்டுவெடிப்புத் தாக்குதல்கள் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு கிருஸ்தவ தேவாலயங்களில் தமிழ் மக்களுக்கான ஆராதனைகளின் நடத்தப் பட்டதை, இஸ்லாமிய தீவிரவாதிகளின் தமிழ் மக்கள் மீதான பயங்கரவாதத் தாக்குதல் என்பதை எவரும் பேசுவதாகத் தெரியவில்லை. இந்தத் தாக்குதலை இப்படித்தான் பார்க்க வேண்டிய தமிழர் தேசியக் கூட்டமைப்பு, வழமை போல கண்ணை மூடிப் பால் குடிக்கும் பூனைகள் போல நடந்து கொள்வதைத் தமிழ் மக்கள் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்?

அதாவது பிள்ளையைக் கிள்ளும் வேலையை செய்ய ஞானசாரதேரரும், தேசிய ஜமாத்தும் மகிந்தர் குடும்பமும் செய்ய, தொட்டிலை ஆட்டும் வேலையை மைத்திரி செய்து, தமது எதிர்கால அரசியல் வெற்றிக்கு மகிந்தரை ஆதரிக்க, இருவரையும் எதிர் கொண்டு தமது அரசியலை ரணில் செய்ய, நாடே படுபாதாளத்தை நோக்கி விரைந்தது.



'எரிகிற வீட்டிலே புடுங்கினது மிச்சம்' என்பது போல இஸ்லாமியத் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ஹிஸ்புல்லா போன்றவர்கள் அமைச்சுப் பதவிகளையும், நில ஆக்கிமிப்புகளையும், தமிழ் மக்களுக்கு எதிரான அரசியலையும் நடத்தி, மாகாண



AKM

**Alpenstr.1, 3072 Ostermundigen**
**Tel. 031 9312525 (Bern Nilavani)**
**Basel Str. 80, 6003 Luzern**
**Tel. 041 2405400**

**மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!**

**தமிழனின் வரலாற்றில்**
**மாபெரும் புரட்சி**

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது






உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



AKM

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்
சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

“விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM



சபை ஆளுநர் பதவிகளையும், மைத்திரி பாலசிறிசேனாவின் ஆதரவோடுப் பெற்றுத் தமிழ் மக்களை அடக்கி, வதைக்கும் அரசியலை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

காத்தான் குடியிலே ஒரு அரபுநாடு ஹிஸ்புல்லா தலைமையில் உருவாக்கப்பட்டு விட்டது. அங்கே பள்ளிவாசல் ஒன்றில் உரையாற்றிய ஹிஸ்புல்லா, "இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு 7,000 குடும்பங்கள் தயாராக உள்ளனர். அதற்கமைய அவர்கள் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றில் விண்ணப்பித்துள்ளனர். இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையடுத்து, வசதியுடைய குடும்பங்களே இவ்வாறு நாட்டை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளனர். மேலும் முஸ்லிம்களாகிய நாங்கள் இந்த நாட்டிலேதான் சிறுபான்மையினர். ஆனால் உலகில் நாங்கள் பெரும்பான்மையினர் அதைமிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்." என்றார்.

**இத்தகைய பின்னணியில் தமிழர் தாயகக் கோட்பாடு குப்பையிலே போட்டு விட்டது தரங்கெட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு. தன்மானம் கொண்ட தமிழன் எவனாவது இந்தக் கூறுகெட்ட கூத்தாடிக் கூட்டமைப்பை ஆதரிக்க முன் வருவானா?**



# Radio - by - Phone

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

**00 49 231 700 977 60**

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

15 YEARS ANNIVERSARY

மேலதீக விபரங்களுக்கு...

**www.etr.fm**



# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

பகுதி.21

- அவதானி

> ஒரு நாட்டினுடைய சமூக, பொருளாதார கட்டமைப்பு என்பது அந்த நாட்டினுடைய முதுகெலும்பு போன்றது.

சமூக கட்டமைப்பு என்பது, அந்த நாட்டு மக்களின் இறுக்கமான தேசப்பற்றைக் குறிப்பதாகும். ஒரு நாடு சந்திக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் போதுகூட, அம்மக்கள் சந்திக்கும் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகள் காரணமாக நாட்டின் மீது கோபமோ, அதிருப்தியோ கொள்ளாது, இது எனது நாடு என்ற தேசப்பற்றும், நான் இந்நாட்டின் தேசிய இனம் என்ற தேசியப்பற்றும், சமூகப் பற்றாக மாறுகின்றது.

உணவு என்பது ஒரு மனிதனுடைய உடல் ஆரோக்கியத்தை பேணி, அவனிடத்தில் சிந்திக்கும் ஆற்றலுக்கு உதவுகின்றது.

உளவு நிறுவனங்கள் ஒரு நாட்டினுடைய ஒட்டுமொத்த கட்டமைப்பையும் சிதைப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. ஒரு சாமானியனின் எண்ணத்தில் பயிர்கள் மூலமும், உணவின் மூலமும் ஒரு நாட்டை சீர்குலைப்பது சாத்தியமற்றது. அது ஒரு கற்பனைவாதக் கருத்து என்று தோன்றும். ஆனால், உண்மையில் பாரதூரமான பாதக விளைவு உணவிலேயே ஆரம்பிக்கின்றது.

மனிதனின் உடல் என்பது என்ன? என்பதை அவதானத்திற்குட்படுத்தினால், பொருந்தாத உணவை பொருந்துவதற்காக திணிக்கப்படும் போது , உடல் உறுப்புக்கள் இயல்பு நிலையை இழக்கும், அதனால் ஏற்படும் தீமை அச்சத்தை ஏற்படுத்துகின்றது.



ஒரு விவசாயின் வாழ்வாதாரத்திற்கு காரணமாக இருக்கும் மண்ணின் தன்மை கெடுவது பற்றியோ, மரபணு மாற்றுப் பயிர்கள் தம்மீது திணிக்கப்படுவது பற்றியோ அவன் அதிகளவு அக்கறை கொள்ள மாட்டான். ஏனெனில் இயல்பு நிலையும், இயற்கை விவசாயமும் அவனை விட்டு படிப்படியாக விலகிப் போகிற போது, தனது பயிர்ச் செய்கைக்கான அடுத்த தெரிவை அவன் சிந்திக்க முடியாதவாறு அவன் சூழ்நிலைக் கைதியாகி விடுவான்.

மண் கெடுவது பற்றியோ, உடலுக்கு ஒவ்வாத மரபணுப் பயிர்ப் பயன்கள் பற்றியோ அவன் பலரோடு கலந்துரையாடும் போது, அறிந்து கொண்ட நிலையிலும்கூட, அவனால் எதுவுமே செய்ய முடியாத நிலைக்கு தனி மனிதனாக, எதிர்நிலை வலுச்சக்தி பலவீனத்தை அவன் கொண்டிருப்பான்.

ஒரு நாடு விவசாய அமைச்சுக் கூடாக இத்தகு பயிர்ச்செய்கை மீதான உளவு நிறுவனத் தாக்கங்களை தடுத்து நிறுத்த வேண்டிய கவனத்தைக் கொண்டிருக்காத பட்சத்தில், தனி மனிதனால் எதுவுமே செய்ய முடியாது.

விவசாயத்திற்கு வேதியல் பொருட்களின் பயன்பாடு பெரும் கேடு விளைவிக்கும் என விவசாய அமைச்சு மட்டத்தில் எல்லோரும் பேசிக் கொண்டிருப்பார்களே தவிர, அவர்களால் அதனைத் தடுத்து நிறுத்தவே முடியாது.

ஒரு நாட்டுக்குள் மரபணு மாற்றப் பயிர்களையோ, விதைகள், கிழங்கு வகைகள் போன்றவற்றையோ, பசளை என்ற பெயரில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களோ விவசாய அமைச்சருக் கூடாகவோ, அதிகாரிகளுக் கூடாகவோ தான் நாட்டுக்குள் வந்து விடுகின்றன.

உளவு நிறுவனங்கள் அமைச்சரையோ, அதிகாரிகளையோ பணம், பொருள், பெண் என்ற ஏதாவது ஒன்றின் மூலமாக வாங்கிவிடுவார்கள்.






விவசாயத் துறையின் தவறான அணுகுமுறைக்கு எதிர்ப்பு கிளம்பும் தருவாயில், வெளிநாட்டு உளவு நிறுவனங்களின் விவசாயத்தில் பாண்டித்தியம் பெற்றவர்கள் போன்று தம்மைக் காட்டிக் கொள்வார்கள், விவசாயத்துறை அமைச்சர், அதிகாரிகள் இன்னும் விவசாயத்துறை சார்ந்த கல்வியலாளர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, பல்கிப் பெருகி வரும் சனத்தொகையின் அளவுக்கு ஏற்ற மாதிரி உணவு உற்பத்தி வேண்டுமெனில், தம்மால் அறிமுகப்படுத்தப்படும் விவசாய முறையே சிறந்தது என்பதை ஆணித்தரமாக வைப்பதுடன், அப்பயிர்ப் பலன்களால் மனித உடலுக்கோ, அவர்களின் ஆரோக்கியத்திற்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதையும் தெளிவாகப் புரிய வைப்பார்கள்.

*(தொடரும்)*



வண்ணை தெய்வம்

# திருமணநாள்

மதன், கவிதா இருவருக்கும் அன்று 25வது திருமணநாள். இப்பொழுதெல்லாம் சின்னச் சின்ன விசயங்களுக்கெல்லாம் இருவருக்குள்ளும் சண்டை வந்துவிடும்! எல்லாம் ஈகோ பிரச்சனைதான். கவிதாவிற்கு மனதிற்குள் தெரியும் 'இது சின்னப் பிரச்சனை, இதை நான் பெரிதுபடுத்தாமல் விட்டிருக்கலாம் என்று" பின்னர் 'அவரும்தான் இதை பெரிதுபடுத்தாமல் இருந்திருக்கலாமே!" என்ற அந்த ஈகோ வந்து தடுத்துவிடும்.

இருவரும் காதலித்துத்தான் திருமணம் செய்தவர்கள்! திருமணம் முடிந்து முதல் குழந்தை பிறக்கும் வரையும் கவிதா தவறே செய்திருந்தாலும், மதன் அதைப் பெரிதாக எடுப்பதே இல்லை. குழந்தை பிறந்த பின்பு மதன், குழந்தையுடன் அதிக நேரங்களை செலவிடுவதால் முன்புபோல் தன்னிடம் அதிகம் பிரியமில்லையென கவிதாவின் மனதிற்குள் ஒரு வருத்தம்! அதற்கு ஏற்றாற்போல் மதனும் சில சின்ன விசயங்களுக்கெல்லாம் கவிதாவுடன் கோபப்படுவான்! இதுவே பிரச்சனையின் ஆரம்பம்!.

மதனுக்கு தான் கவிதாவுடன் அப்படி நடப்பதாக அவனுக்குத் தெரியவில்லை! ஆனால், குழந்தை விடயத்தில் கவிதா கவனக் குறைவாக இருந்தால் கோபப்படுவது உண்டு. அதை அப்பொழுதே மறந்தும் விடுவான். ஆனால் கவிதாவோ 'குழந்தையைக் கவனிக்கவில்லையென்று தானே என் மீது கோபப்படுகின்றார்! இனி நான் குழந்தையைக் கவனமாகப் பார்க்கின்றேன்" என்று சொல்லி, மதனின் தேவைகளைக் கவனியாது நாள் முழுவதும் குழந்தையுடனேயே இருப்பாள்.

இப்படியான சின்னப் பிரச்சனைகள் சில சமயங்களில் பெரிதாகி விடுவதும் உண்டு. எப்படியான மனஸ்தாபங்கள் இருந்தாலும், ஒவ்வொரு திருமணநாள் அன்றும் இருவரும் பழைய காதலர்களாக மாறிவிடுவார்கள். அல்லது அவர்களின் குழந்தைக்காக சமாதானமாகி விடுவார்கள்.

குழந்தை வளர்ந்து கொஞ்சம் பெரியவளாக வளர... தங்கள் சண்டைகள் பிள்ளைக்குத் தெரியக்கூடாது என இருவரும் சமாதனமாக இருப்பதாக நடித்துக் கொள்வதும் உண்டு.

சென்ற வருடம் வரைக்கும் மகள் இருந்ததால் கடந்த 24 வருடத் திருமண நாட்களும் மகளுடன்தான் கொண்டாடினார்கள். சில மாதங்களுக்கு முன்னர்தான் அவளுக்கும் திருமணமாகி, கணவன் வீடு சென்று விட்டதனால் இந்த வருடம் இவர்கள் இருவரும் மட்டும்தான் வீட்டில்.

ரசத்திற்கு உப்பு குறைவு என்ற பிரச்சனையில், இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் இருவரும் ஒருவருக்கொருவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். இருந்தாலும் இன்று காலையில் தனக்கு திருமண வாழ்த்துச் சொல்லுவார் என கவிதா காத்திருந்தாள். ஆனால், மதன் அன்று வழமைக்கு மாறாக நேரத்துடனேயே வேலைக்குச் சென்று விட்டான்.

'மதன் திருமண நாளை மறந்திருப்பாரோ?" என்ற கவலை ஒரு புறம் இருந்தாலும், இன்னொரு மனம் சொல்லியது, தானாவது வந்து நினைப்பூட்டியிருக்கலாம் என்று. இப்படியாக மனம் குழப்பத்தில் இருந்தாலும், மாலையில் வேலை முடிந்து வரும் கணவன் கண்டிப்பாக திருமண நாள்

பரிசோடுதான் வருவார் என்ற நம்பிக்கையோடு, கணவனுக்கு பிடித்தமான பால்ப்பாயசம் காச்சுவதற்கான ஆயுத்தங்களைச் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது வீட்டு காலிங் பெல் ஒலித்தது. மதிய நேரத்தில் யார் வந்திருப்பார்கள்? என்று எண்ணிய படியே கதவைத் திறந்தாள் கையில் பூங்கொத்துடன் முகம் மலர மதன் நின்றான்!

மனமெங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம் கவிதாவிற்கு. பூங்கொத்தைக் கையில் கொடுத்து, திருமணப் பரிசாக கன்னத்தில் முத்தத்தையும் கொடுத்த மதன், 'சீக்கிரமாய் வெளிக்கிடு, வெளியில் போய் சாப்பிடுவோம்" எனக் கூறியவன், தானும் அவசரமாக பாத்ரூமிற்குள் சென்று விட்டான்.

உடை மாற்றுவதற்காக கவிதா அறைக்குள் சென்றாள். அப்பொழுது செல்போன் ஒலிக்க எடுத்து 'ஹலோ" என்றாள்.

தொலைபேசியில் 'மேடம் மிஸ்ற்ரர் மதன் வீடா?"

'ஆமா நீங்க..."

'நான் இன்ஸ்பெக்டர் பேசுறன் நீங்க மிஸ்சிஸ் மதனா?"

'ஆமா என்ன விசயம்?"

'வெரி சாரி மெடம்! உங்க கணவர் றெயின்லை இருந்த தவறி விழுந்து இறந்திட்டார்! நீங்க உடனடியா ஐஜீ.எச் வந்து அடையாளம் காட்ட முடியுமா?"

தடுமாறிய கவிதா, தன்னைச் சமாளித்துக் கொண்டு 'என் ஹஸ்பெண்ட் வீட்டிலைதான் இருக்கிறார். நீங்க வேறை யாரையோ என் ஹஸ்பெண்ட் என நினைச்சு போன் பண்றீங்க" என்றாள்.

'இல்லை மேடம் காலமை ஒன்பது மணிக்கு ஓடிவந்து, றெயில்லை ஏறும்போது தவறி விழுந்து ஸ்பாட்டிலேயே இறந்திட்டார். அவருடைய பேர்சிலை வீட்டு அட்ரசும், டெலிபோன் நம்பரும் இருந்தது. அதை வைத்துத்தான் போன் பண்ணினேன்!"

கவிதா கேள்விப்பட்டிருக்கின்றாள் 'உயிர் போன அந்த நேரத்தில் தனக்குப் பிடித்தமானவர்களைத் தேடி வந்து ஆன்மாக்கள் பேசுமென்று!" அப்படியானால் மதனின் ஆன்மாதான் தேடி வந்து தன்னுடன் பேசியதா? அந்த நிமிடத்தில் கவிதாவின் மனதில் ஏதேதோ எல்லாம் நினைவிற்கு வந்தது.

'எனக்குக் கிடைத்தது போல் ஒரு வாழ்க்கை யாருக்குக் கிடைக்கும்? என்னுடைய பிடிவாதக் குணத்தால் இன்பமான ஒரு வாழ்க்கையை நானே நரகமாக்கி விட்டேனே!" இப்படியாக ஏதேதோ எல்லாம் யோசித்தாள். அதே நேரத்தில் மனதின் மறுகுரல் சொன்னது 'வந்தது மதன்தான்! என் மதன் இறக்கவில்லை... இறக்கவில்லையென்று" திரும்பத் திரும்ப கூறியது. இந்த மனக்குழப்பத்துடனேயே கவிதா மயக்கமாகி விட்டாள்.

அதே நேரத்தில் பாத்ரூம் கதவைத் திறந்து, தலையைத் துடைத்தபடியே வந்த மதன், கவிதா மயங்கிக் கிடப்பதையும், தொலைபேசியின் தொடர்பில் ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருப்பதையும் கவனித்து விட்டு, ஓடி வந்து ரிசீவரை எடுத்து, ஹலோ என்றதும் மறுமுனையில் இருந்து இன்ஸ்பெக்டரின் கூரல், 'மெடம் மதன்... மெடம் மதன்... என ஒலிக்க மதன் சொன்னான் 'ஹலோ நான் மெடம் மதன் இல்லை, அவருடைய கணவன் மதன் பேசுறன்! நீங்க யாரு?"

மறு முனையின் குரல் ஆதிர்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் கேட்டது 'நீங்க மதனா? அப்ப றெயிலில் அடிபட்டு இறந்தது மதன் இல்லையா?"

'நான்சென்ஸ் நான்தான் மதன்! நான் சாகல்லை! ஆமா நீங்க யார் சார்?"

'நான் பொலிஸ் இன்ஸ்பக்டர் பேசுறன். இங்கை ஒருத்தர் றெயிலிலை ஓடிவந்து ஏறும்போது தவறி விழுந்து, அந்த இடத்திலேயே இறந்திட்டார்! அவருடை பாக்கெட்டில் இருந்த பர்ஸில் இந்த முகவரியும், டெலிபோன் நம்பரும்தான் இருந்தது. அதுதான் தவறுதலா... " அவரின் வார்த்தைகள் தடுமாறியது.

தன்னுடைய பர்சை காலையில் ஒருவன் பிட்பாக்கெட் அடித்த விசயத்தைச் சொன்னதும் தான் தான் அவசரப்பட்ட விசயத்தை இன்ஸ்பெக்டர் உணர்ந்தார்.

மதன் கவிதா முகத்தில் தண்ணீர் தெளித்து, மயக்கம் தெளிவித்ததும் கண் திறந்த கவிதா மதனைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

இந்த 25வது திருமணநாள் இருவருக்கும் புதுமையான திருமண நாளாகவும்... கவிதாவிற்கு வாழ்க்கையைப் புரிந்து கொள்ளக்கூடிய நாளாகவும் இருந்தது.



ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப்போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

## பாகம் –5

அடிப்படையில் பரிணாமத்தில் என்ன நடக்கிறதென்றால், உயிர்கள் அனைத்தும் அவற்றின் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப தகவமைக்கப் படுகின்றன. மீன்கள் நீரில் வாழ்வாதாரக் கேற்ப உடல் தகவமைக்கப் பட்டுள்ளது. அதுபோல பறவைகள் வானிலும் வாழ பரிணாமத்தால் உடல் தகவமைக்கப் பட்டுள்ளது. தத்துவமேதைகள் கார்ல் பாப்பர், புளொட்கின் ஆகியோர் தகவமைப்புகளை அறிவு என்றே பார்க்கின்றனர்.

இதன் அடிப்படையில் உயிர்கள் அனைத்தும் அவை வாழும் சூழலுக்கு ஏற்ற அறிவைப் பெற்றுள்ளன என்று கூறலாம். இதன்படி ஓர் உயிர் தான்வாழும் சூழலுக்கு ஏற்ப அறிவைப் பெற்றுள்ளதா? இல்லையா? என்பதே அதன் வாழ்வை தீர்மானிக்கிறது. தாவரங்கள், விலங்குகள் அறிவை உணர்வதில்லை, ஆனால் இந்த அறிவு அதன் மரபணுக்களில் இருந்து அவற்றை இயக்குகிறது. நாம் அறிவை உணர்கிறோம், கற்கிறோம் அதுதான் வித்தியாசம்.

மனிதன் அடைப்படையில் நிலத்தில் வாழ்வதற்கென்று வடிவமைக்கப் பட்டாலும், அவனால் நீரிலும், வானிலும், விண்வெளியில் வாழ முடியும். இதற்குக் காரணம் நாம் அறிவைக் கற்றல் மூலம் வளர்த்துக்கொள்ள முடிவதால்தான். இந்த அறிவின் தேவை உயிர்களுக்கு மட்டுமல்ல, உயிரை ஒட்டிய அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தும். ஒரு தனிமனிதனின் வெற்றி, வணிக நிறுவனத்தின் வெற்றி, ஒரு நாட்டின் வெற்றி உட்பட தீர்மானிப்பது அவ்வமைப்புகள் பெற்றுள்ள அறிவு.

இவ்வுலகம் உயிர்கள் வாழ முடியாதபடி வெப்பமடைந்தாலும், அந்தச் சூழலிலும் வாழ்வதற்கான அறிவை மனிதன் பெற்றுக் கொண்டால், அதிலும் செழிக்க முடியும். அடிப்படையில் மனிதனின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போவது அறிவு

மட்டுமே. இதிலிருந்து நமக்கு ஒரு அரசியல் பாடம் இருக்கிறது. **ஓர் இனம் வாழ்கிறதா? அல்லது அழிகிறதா? என்பது அவ்வினம் பெற்றுள்ள அறிவைப் பொறுத்தே அமைகிறது. நமது சிக்கல்கள் அடிப்படையில் ஒரு அறிவுச் சிக்கல் என்று உணரவேண்டும்.**

“பரிணாமம் என்பது அறிவை உருவாக்கும் முறை. நமது அறிவியல் முன்னேற்றம் என்பதும் இவ்வழியிலேயே நடக்கிறது” என்கிறார் அறிவியல் தத்துவமேதை பாப்பர். நமது அறிவியல் வளர்ச்சி என்பது பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பார்க்கிறார். அறிவியல் முறை என்பது அடிப்படையில் பரிணாமத்தின் மூன்றடுக்கு முறைதான்:

1. தற்காலிக கோட்பாடுகள் (வேறுபாடுகள்)

2. ஆய்ந்து, விவாதித்து, சோதனை செய்து தவறான கோட்பாடுகளை கண்டுபிடித்து நீக்குதல். (தேர்வு)

3. விவாதத்தின் விளைவாகப் புதிய சிக்கல்களின் தோற்றம் அதனால் புதிய கோட்ப்பாடுகளின் உருவாக்கம். (இனப்பெருக்கம்)

அறிவியலும் பரிணாமத்தைப் போல முழுத் திட்டமிடல் இல்லாமல், அடுத்தடுத்து எந்த சிக்கல்களைத் தீர்க்க முடியுமோ, அதற்கு கோட்பாடுகளை உருவாக்கித் தீர்த்துக்கொண்டே போகிறது. இவ்வாறுதான் அறிவியல் முன்னேறுகிறது. மனிதனின் பரிணாம வளர்ச்சி மரபணுக்கள் மூலம் நிகழ்வதல்ல, கற்றல் மூலம் நிகழ்வது. நமது மூளை ஈராயிரம் வருடங்களுக்கு முன் எப்படி இருந்ததோ, அப்படியேத் தான் இன்றும் இருக்கிறது, நமது முன்னேற்றம் அனைத்தும் கற்றலையும், கண்டுபிடிப்புகளையும் அடுக்குவதனால் உருவாகிறது.

அறிவியலைப் போலவே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியும்




இந்தப் பரிணாம உத்தியை நம்பியே இருக்கிறது:

*1.* பல்வேறு வேறுபாடுகளுடனான தொழில் நிறுவனங்கள் (வேறுபாடுகள்)

*2.* இலாபமான தொழில் நிறுவங்கள் பிழைக்கின்றன, வளர்கின்றன; முடியாதவை அழிகின்றன (தேர்வு)

*3.* புதிய வாய்ப்புகளினால் புதிய நிறுவனங்களின் தோற்றம் (இனப் பெருக்கம்)

அமெரிக்காவின் சிலிகான் பள்ளத்தாக்கில் 75% சதவிகித தொழில் முனைவோர் தோல்வி அடைகின்றனர். வெற்றிபெறும் சில நிறுவனங்கள் மாபெரும் வளர்ச்சியடைந்து பொருளாதாரத்தையே மாற்றி அமைக்கின்றன. வெற்றியடைந்தோரின் வெற்றி என்பது, தோற்றவர்கள் இல்லாமல் நடப்பது இல்லை. அவற்றின் தோல்விகளிலிருந்து கற்றுத்தான் மற்றவை வெற்றியடைகின்றன. அதிலும் ஒரு சிலதே மாபெரும் வெற்றியடைகின்றன. எது மாபெரும் வெற்றியடையும்? என்று முன்கூட்டியே அறியமுடியாது. அது தானாகப் பரிணமிப்பது.

“அடிப்படையில் சமூகம் என்பது மிகச்சிக்கலான அமைப்பு என்பதால், அதில் தோன்றும் கடினமான சிக்கல்களை முழுத் திட்டமிட்டு தீர்க்க முடிவதில்லை. அவ்வாறான சிக்கல்களைத் தீர்க்க சிறந்த உத்தி என்பது பரிணாமமே!” என்கிறார் பார்யாம். இதற்கு அறிவியல் முன்னேற்றமும், பொருளாதாரமும் நல்ல சான்றுகள். இதே உத்தியைப் பயன்படுத்தி நல்ல கல்வி, சுகாதார அமைப்புகளையும் உருவாக்க முடியும் என்கிறார். இதை நீட்டித்து ஒரு தேசிய இனத்தின் பாதுகாப்பிற்குத் தேவையான இயக்கங்களையும் நம்மால் உருவாக்க முடியும். முதலில் புலிகள் எவ்வாறு பரிணமித்தார்கள் என்று பார்ப்போம்.

## புலிகளின் பரிணாமம்

புலிகள் இயக்கம் முதலிலேயே முற்றும் முழுதும் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இயக்கம் அல்ல. அது ஈழச் சூழலுக்கு ஏற்ப பரிணமித்த ஒரு தனித்துவமான இயக்கம். யாரையும் அப்படியே படி ***(copy)*** எடுத்து உருவாக்கப்பட்டதல்ல. முதலில் அரசியல் பாதையில் சென்று கொண்டிருந்த ஈழப்போராட்டம், வெற்றிபெற முடியாததனால், ஆயுதப் போராட்டக் கருத்தியல் உருவானது. முதலில் பல்வேறு இயக்கங்கள் பல்வேறு கருத்தியல் வேறுபாடுகளுடன் தோன்றின. அவற்றிற்கிடையே யார் சிறப்பாக ஈழவிடுதலையை முன்னெடுக்கிறார்களோ? அவர்களுக்கு மக்களின் ஆதரவு பெருகும், அவர்கள் பலசாலி ஆவார்கள்.

இவ்வாறு இயக்கங்களுக்கிடையே ஒரு பரிணாமப் போட்டி ஆரம்பிக்கிறது. பரிணாமத் தத்துவத்தின்படி எந்த இயக்கம் ஈழச்சூழலுக்கு ஏற்றபடி கற்று, தங்களை சரியாக தகவமைத்துக் கொள்கிறார்களோ, அவர்களே வெற்றி பெறுவார்கள். முடிவில் அந்தப் பேறு புலிகளுக்கே கிடைத்தது. வேறு எவராவது சிறப்பாக தகவமைத்திருந்தால், அவர்கள் வென்றிருப்பார்கள். அவர்கள் பரிணாமத்தால் சிறப்பானவர்கள் என்று தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். அதனால் தான் அவர்கள் பல வெற்றிகளைப் பெறமுடிந்தது.

இயக்கங்களுக்கு இடையேயான ஆரம்பகால போட்டிகளைச் ‘சகோதர யுத்தம்’ என்று குற்றம் கூறுவது அறியாமை. ஆரம்பத்தில் யார் வெற்றி பெறுவார்? எந்தக் கருத்தியல் வெற்றி பெரும்? எந்த இயக்கம் திறமையானது? என்று யாராலும் தீர்மானிக்க முடியாது. அதற்கான அறிவு யாரிடமும் இல்லை. மேலும், ஒரு தேசியத்திற்கு ஒரு இராணுவம்தான் இருக்கமுடியும். உலகில் எந்த நாடும் இரு இராணுவங்களை வைத்திருப்பதில்லை.

ஆரம்பத்தில் பல ஆயுத இயக்கங்களாக இருந்தாலும், முடிவில் அவை இணைந்து அல்லது சில அழிந்து, ஒரே இராணுவமாகத்தான் பரிணமிக்கும், வேறு வழியில்லை. அதுதான் ஈழத்தில் நடந்தது. இயக்கங்களுக்கிடையே போட்டி இல்லாமல் இயக்கங்கள் கற்கவும் முடியாது, வளர்ச்சியும் அடையவும் முடியாது. ஒரு பலமான தமிழ்த்தேசிய

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles



தாலி மற்றும் பொன்னுருக்குதல், இவையாவும் இங்கு செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம் எமது ஸ்தாபனத்தால் தங்கநகை சேமிப்புத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. மாதம் 100 CHF என 12 மாதம் 1200 CHF இணைய விரும்புவோர் உங்களது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யலாம்.

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

nfo@nsjewellery.com Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

GUARANTEE BEST PRICE GUARANTEE

உயர்தர புடவைகள் மற்றும் துணி வகைகள் வாங்க சிறந்த இடம்



Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland

# Swiss Life
## Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.



**Herr Krishnasamy THILEEPAN**
**Dipl.Finanzberater IAF**

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்



மருத்துவ காப்புறுதி



வாகனக் காப்புறுதி



ஆயுட் காப்புறுதி



குழந்தைகளுக்கான காப்புறுதி



சட்டக் காப்புறுதி

**Sägestrasse 79**
**3098 Köniz**
**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

Cicero Member ID 15787
www.cicero.ch

So fängt Zukunft an.

இராணுவப் பரிணாமத்திற்குத் தேவையான ஒன்று.

இவ்வாறு பல இயக்கங்கங்கள் தோன்றாமல், பிரபாகரன் அவர்கள் தலைமையில் மட்டும் ஒரே இயக்கம் தோன்றி இருந்திருந்தால், அந்த புலிகள் இயக்கம் இப்பொழுது படைத்துள்ள சாதனைகளைப் படைத்திருக்குமா? இந்தக் கேள்விக்கு பரிணாமத் தத்துவம் கூறும் பதில் “இல்லை” என்பதுதான். ஏனென்றால் பிரபாகரன் அவர்கள் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும், மற்ற இயக்கங்கள் செய்யும் பிழைகளிலிருந்து கற்று, முன்னேற வாய்ப்பு இருந்திருக்காது. அவர்களை எளிதாக எதிரிகள் மடக்கி இருப்பார்கள். போட்டி இருக்கும் பொழுதுதான் கற்றல் அதிவேகமாக இருக்கும். புலிகளை அடிப்படையில் வெற்றி பெற வைத்தது, பரிணாமத்தால் உருவாகும் கற்றலே!.

புலிகள் இவ்வாறு வெற்றியடைந்து, ஒரு தேசிய இராணுவத்தை உருவாக்கியபின்னும் கற்றல் நின்று விடவில்லை. உலக இராணுவ உத்திகளை கற்றது மட்டுமில்லாமல், ஒவ்வொரு போரிலும் அனுபவம் பெற்று புதிய உத்திகளை, அமைப்புகளை, படைப்பிரிவுகளை உருவாக்கிக் கொண்டே இருந்தார்கள். எவ்வாறு பரிணாமம் அனைத்துப் பாதைகளின் வழியாக செல்கிறதோ, அதே போன்று அனைத்து வழிமுறைகளும் பின்பற்றப்பட்டன. படைப் பிரிவுகளுக்குள்ளே யார் எதிரியுடன் போரில் சிறக்கிறார்கள் என்ற போட்டியும் உருவாகிறது.

இதன் விளைவாக பல சிறப்பான படையணிகளும், தலைவர்களும் பரிணமிக்கிறார்கள். கடற்படை, விமானப்படை என புதிது புதிதாக பரிணமித்துக்கொண்டே இருந்தார்கள். இன்று புலிகள் இருந்திருந்தால், மேலும் பல சாதனைகளை செய்திருப்பார்கள். ஒரு செயற்கைக் கோளை ஏவினாலும் ஏவி இருப்பார்கள். அவர்களுக்கு எப்பொழுது ஈழம் அடைவோம்? அதற்கு என்ன பாதை? எனவும் தெரியாது. ஆனால், ஒவ்வொரு அடியும் அதனை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அதுதான் பரிணாம உத்தி என்பது. அதைத்தான் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ பின்பற்றிக் கொண்டிருந்தார்கள்.

புலிகள் இயக்கம் என்பது பரிணமிக்கும், கற்கும் இயக்கம். அதனால்தான் அவர்களால் மாபெரும் சாதனைகளைப் படைக்க முடிந்தது. அவர்கள் கற்றது பலவகைகளில் புதுமையானது என்பதால், உலகம் இன்னும் பல நூற்றாண்டுகள் அவர்களைக் கற்றுக்கொண்டு இருக்கும். இன்று உலக இராணுவப் பள்ளிகளில் புலிகளைப் பற்றியப் பாடம் கட்டாயம் ஒன்று இருக்கும். புலிகள் உலக இராணுவங்களுக்குப் பாடத்தைக் கற்றுக் கொடுத்தவர்கள். அதுபோன்ற சாதனைகளை ஒரு பரிணாம இயக்கத்தினால் மட்டுமே செய்ய முடியும்.

தொடரும் ...


GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607



புதுப்பொலிவுடன் மீண்டும்....
ESTD 1992
மங்கையரின் மனங் கவரும்
2019 வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Gopara Gnanam
Rheinische Str.62
44147 Dortmund
Mob.: 0171 330 65 42,
0176 246 54 009
Wedding Sarees
DISCOUNT!!



“தேசப்பற்றாளர் துரைராசா அவர்கள் ஒரு அபூர்வமான மனிதர். நெஞ்சத்தில் தூய்மையும், நேர்மையும் கொண்டவர். தன்னலமற்றவர், பொது நலத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். எளிமை அவரது அழகான மாண்பு. இந்த மண் எமக்குத் தந்த அறிவு ஜீவீகளில் அற்புதமானவர். இந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தவர் அவர்.”

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு.வே.பிரபாகரன்

## தமிழ் அறிஞர்கள் 16



# பேராசிரியர் துரைராஜா மனதை விட்டகலாத மாமேதை!

பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் 1934ம் ஆண்டு, கார்த்திகை மாதம் 10ம் திகதி, யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டிப் பகுதியில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாட சாலையிலும், இடை நிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்றார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் குடிசார் பொறியியற் கற்கை நெறியை நிறைவு செய்தார். அன்றைய காலத்தில் கொழும்பில் இயங்கிய இலங்கைப் பல்கலைக் கழகத்திலேயே பொறியியற் பீடம் இயங்கியது.

தன்னுடைய பட்ட மேற்படிப்பை கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தில் 1962ம் ஆண்டு, கலாநிதிப் பட்டத்துடன் நிறைவு செய்தார். ‘துரை விதி’ என்னும் மணல் துறை சார்ந்த விதி ஒன்றையும் நிறுவினார். இன்றும் கூட குடிசார் பொறியியலில் கற்பிக்கப்படும் **Cam- clay locus** ஆனது துரை விதியிலிருந்தே பெறப்பட்டது. தொடர்ந்து இலங்கைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியற் பீடம் ஆரம்பிக்கப்பட்டதும், அங்கும் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழக

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

## Note Books

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

**Sehr Schnelle Lieferung!**
**Hauslieferungen**
**Vor-Ort Installationen**
**Netzwerklösungen für Firmen**
**Reparaturen aller Marken!**

**günstige gebrauchte Computer**
**Reparaturen aller Marken**

**www.pckaufen.ch**

**Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101**
**Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22**
**Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50**
**Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07**

## iPhone Reparaturen

**www.iphonefan.ch**

பொறியியற்பீட பீடாதிபதியாகவும் கடமையாற்றினார்.

பேராசிரியர் தாய், தந்தைக்கு நல்ல பிள்ளை, சகோதரர்களுக்கு நல்ல முன்னோடி, தனது குடும்பத்திற்கு நல்ல தலைவன்,தன் பிள்ளைகளுக்கு நல்ல தந்தை. மனைவிக்கு நல்ல கணவன். அவர் குடும்ப வாழ்வு யாழ்ப்பாண கந்த புராண கலாசார வாழ்வுக்கு நல்லதொரு உதாரணம். பெரியோரை மதித்தல், ஆசிரியரை மதித்தல், சமயவாழ்வில் குடும்ப வாழ்வை ஒன்றிணைத்தல், தமிழர் கலாசாரத்தில் ஒன்றிப் போதல், கலாசார வாழ்வைத் தனது பெருமையாகக் கொள்ளல், அடுத்து வரும் சந்ததிக்கு தமிழர் வாழ்வியலின் பெருமைகளைக் கையளித்தல் போன்றவை அவர் வாழ்வின் இயல்புகளாகும். பேராசிரியர் துரைராஜா யாழ்ப்பாணச் சமூகத்தை வலுவூட்டுவ தற்காக அயராது உழைத்தவர்.தனது பொறியியல் கல்வியை தனது மாணவர்களுக்கு விருப்புடன் கற்பித்தவர். தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அவரை நல்ல குருவாக, நல்லாசானாக மதித்து வந்தனர்.

பின்னர் 1988ம் ஆண்டு, புரட்டாதி மாதத்திலிருந்து, 1994ம் ஆண்டு, சித்திரை மாதம் வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தராக கடமையாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், பொறியியற்பீடம் ஒன்று நிறுவப்படும் என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உறுதி மொழியையடுத்தே, பேராசிரியர் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரானார். ஆனால், இன்று வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொறியியற்பீடம் ஆரம்பிக்கப் படவேயில்லை.

பேராசிரியரின் மாணவன் என்று சொல்வதால் தங்களைத் தாங்களே தரமுயர்த்திக் கொண்டவர்கள் பலர். அவர் மாணவர்களின் பெருமைக்குரியவர் என்பதுடன் மட்டும் நின்றுவிடாது மாணவர்களுக்கும் பெருமை சேர்த்தவர்.


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**




எல்லோரையும் அறிவுடையவர்களாகவும் வினைத் திறனுடையவர்களாகவும் உருவாக்க வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டவர். அவரின் கல்விசார் வரலாற்றை அவர் மாணவர்களே உலகெங்கும் பரப்பி நிற்கின்றனர் என்றால் அவர் பெருமையை பறைசாற்ற வேறு யார் வேண்டும்.

தமிழர் வாழ்விடங்களின் அபிவிருத்திக்காக திட்டமிட்டு செயற்பட்டவர். உதாரணமாக பொருளாதாரத் தடையில் அமிழ்ந்து போன யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க எல்லா தரத்திலான, எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவர். யாழ்ப்பாண மக்கள் பொருளாதாரத் தடை காரணமாக இழந்த வசதிகளை மீண்டும் பெற அவர் அயராது உழைத்தவர்.

இடர்கால யாழ்ப்பாணத்தவரின் பொருளாதார வாழ்வியலையே தனது வாழ்வியலாகவும் மாற்றிக் கொண்டவர். அதனால்தான் அக்கால வாழ்வில் வடமராட்சியிலிருந்து சாதாரண மனிதர்கள் சைக்கிளில் வந்தபோது தானும் சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்து துணை வேந்தராகப் பணியாற்றியவர். அக்காலத்தில் யாழ்ப்பாணச் சராசரி மனிதர்களின் முறையையே தனது குடும்ப வாழ்க்கையை முறையாகவும் மாற்றிக் கொண்டவர். துணைவேந்தர் பதவிக்கான வசதிகளைப் புறந்தள்ளி மக்களில் ஒருவராக தன்னை வரித்துக் கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமகன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 'அக்பர் பாலம்' பேராசிரியரினால் நிர்மாணிக்கப்பட்டது. சிங்களப் பேராசிரியர் ஒருவரின் சவாலை ஏற்று, மகாவலி ஆற்றில் ஒரேயொரு தூணை மட்டும் நிறுவி, இப்பாலம் கட்டப்பட்டது. 'துரைராசா பாலம்' என அழைக்கப்பட வேண்டிய அந்தப் பாலம் இன்று, 'அக்பர் பாலம்' என்றே அழைக்கப் படுகிறது. தமிழர்களாகிய எங்கள் பலருக்கே இந்த விடயம் தெரியாது.

நாங்களாவது அந்தப் பாலத்தின் பெயரை 'துரைராசா பாலம்' என அழைப்பதன் மூலம், பேராசிரியரின் திறமைகளை மறைக்காமல் நினைவு கூறப்பட வேண்டியவரை நினைவு கூர்ந்து,

உண்மைகளை அடுத்த சந்ததியினருக்குக் கடத்துவோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய போது, உடுப்பிட்டியிலிருந்து ஏறக்குறைய முப்பது கிலோ மீற்றர்கள் தூரமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு, துவிச்சக்கர வண்டியிலேயே சென்று வந்தார். போர் மேகங்கள் வடமராட்சிப் பகுதியை அதிகமாகச் சூழ்ந்திருந்த அந்தக் காலப்பகுதியிலும், வல்லை வெளியினூடாகப் பயணம் செய்து, தன்னுடைய பணியைத் தவறாது செய்தார். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். எல்லோரிடமும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் ஒழுக்க சீலர். அதனால் எல்லோருக்குமே பேராசிரியர் துரைராசாவை மிகவும் பிடிக்கும்.

இவரைக் கௌரவிக்கும் முகமாக தேசியத் தலைவர் இவருக்கு 'மாமனிதர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தார். ஈழ வரலாற்றிலே முதன் முதலாய் 'மாமனிதர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது பேராசிரியருக்கே!.

தமிழரின் போராட்டத்துக்காக அளப்பரியச் சேவைகள் செய்த 'மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா' அவர்கள் நோயின் கொடிய பிடியில் சிக்கி, 1994ம் ஆண்டு, ஆனி மாதம் 11ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

தமிழர் நல்ல கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காக பல்கலைக்கழகக் கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளிவாரிக் கற்கைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி, யாழ்ப்பாணச் சமூகத்தை பல்கலைக்கழகம் வரை கொண்டு வந்தவர். வடக்குக் கிழக்குத் தமிழர்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாகவும், மீன்பிடியாளர்களாகவும் இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவினார்.

மீன்பிடிக்கற் கைக்கான திட்டங்களைத் தீட்டினார். விவசாய விளை நிலங்களுக்கிடையே விவசாயபீடம் இருப்பது போல எதிர் கால அபிவிருத்திக்கு வன்னிப் பெரு நிலப்பரப்பே மையமானது, பாதுகாப்பானது என்று கருதி பொறியியல் பீடம் ஒன்றை வன்னியில் நிறுவத்திட்ட மிட்டுச் செயற்பட்டவர். இவரின் இம் முயற்சிகள் இடம், காலம், தேவையறிந்து செயற்பட்டவர் என்பதற்கு நல்ல எடுத் துக்காட்டுக்கள்.

ஒடுக்கப்பட்டவர்களிடத்தும், ஏழைகளிடத்தும் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகளிடத்தும் அன்பும் ஆதரவும், பரிவும், கருணையும் கொணடு விளங்கிய பேராசிரியர் துரைராஜா என்றும் எம் மனதை விட்டகலா மேதையாகவே உள்ளார்.

இங்கு குறிப்பிட வேண்டிய முக்கியமான விடயம் யாதெனில்? இந்தப் போட்டித் தொடரை எல்லோரும் 'துரையப்பா கிண்ணம்' என்றே அழைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. 'பேராசிரியர் துரைராசா கிண்ணம்' என்றே அழைக்கப்பட வேண்டும். (துரையப்பா என்பவர் யாழ் நகர மேயராக இருந்தவர் - யாழ் துரையப்பா விளையாட்டு மைதானம் இவரின் நினைவாகப் பெயரிடப் பட்டுள்ளது.) தமிழர்களாகிய நாம் உண்மையை மறைக்காமல், பெயர்களை மருவ விடாது, சரியான வகையில் நினைவுக் கூருவதன் மூலமே, இந்நாட்டில் தமிழ் நிலைக்கவும், தமிழர்கள் நினைவுக் கூரப்படவும் வழி வகைகள் செய்யலாம்.

இனி மேலாவது சரியான சொற்களைப் பழக்கத்திற்கு எடுத்துக் கொள்வோமா? மாமனிதர் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு புகழ் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதில் அகரம் பெருமையடைகிறது.

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

INNENSTADT WEST

ortel MOBILE

# DORTMUND

## மாநகரில்

# தமிழர் தெருவிழா 2019

## Straßenfest der Tamilen

## 07.09.2019

**100 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் சங்கமிக்கும் மாபெரும் ஆடல் பாடல் கொண்டாட்டம்....**



தமிழர் அரங்கம் · Verein für tamilische Künstler e.V · VMDO Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V. · House of Resources · Tamilischer Kultur Do TKD தமிழர் கலையகம் Bildung Begegnung Beratung · GTVS ஜேர்மன் தமிழ் வர்த்தகர் சங்கம் e.V · comdu.it Deutschland

வெற்றிமணி · தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES · அகரம் · IBC தமிழ் · GTV · itn · தமிழ் MTV · STS தமிழ் TV · tamil.de · Lankasri

0151 633 633 33 | 0157 735 178 49 | 0177 679 4261 | 0162 803 1647 | 0151 27 990 990

அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

ஈழம் என்பது பல தனித் தமிழ் அரசுகளால் ஆளப்பட்டு வந்த தமிழ் மக்களின் தாயக தேசம் ஆகும். அதன் தோற்றம் கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய நிலப் பகுதியே என்பதை, இன்றைய அறிவியல் உலகம் கடல் ஆய்வுகள் மூலம் உறுதிப் படுத்தப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டு விட்டது. இந்த உண்மைகளை காலத்தால் பிற்பட்ட வரலாற்றைக் கொண்ட இனம், அந்நியரின் படை எடுப்புகளால் அடிமைப் பட்டுக் கிடந்தது. அந்நியர் ஆட்சியை சிங்கள அரசர்கள் வரவேற்ற பொழுதிலும், தமிழ் அரசர்கள் தனியாக எதிர்த்தே போராடினார்கள். இவை வரலாற்றில் பாதிவாகி உள்ள உண்மைகள்.

இப்பொழுதும் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகள் இயக்கமும் உயிரைக் கொடுத்துப் போராடிக் காத்த தமிழர் தாயகத்தை ஆரிய இனப் பின்னணியை, தனது பூர்வீகம் என்கிற பொய்யான கற்பனை வாதத்தை அடிப்படையாகக் கொண்ட பௌத்த சிங்கள மதவெறியர் செய்து வருகின்றனர்.

தெலுங்கு, கேரள பின்புலத்தைக் கொண்ட கண்டி மற்றும் கரையோரச் சிங்களவரும், தமிழ் இனத்தின் வரலாற்றுச் சிறப்புகள் மற்றும் கல்வி மற்றும் பொருளாதார வளங்கள் குறித்த பொறாமை காரணமாகவும், ஆரிய திராவிடப் பகைமையை வளர்த்து, இலங்கைத் தீவை அந்நிய தேசங்களிடம் அடமானம் வைத்து, தமிழினத்தை அழித்துப் பெற்ற வெற்றிக் களிப்பில் மிதக்கின்றனர்

இதற்குப் பொறுப்பற்ற தமிழ் அரசியல் பொறுக்கித் தலைவர்களும், தங்களைத் தமிழர் அல்ல எனக் கூறிவரும் தமிழ் பேசும் இலங்கை முஸ்லிம்களும், ஈழத் தமிழ் மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் உயர் கொடுத்துப் போராடிப் நிறுவிய அரசு நோக்கிய தமிழ் ஈழத்தை அழித்த பெருமையைத் தவிர வேறு என்ன சாதனையை செய்து முடித்துள்ளனர்?

இப்பொழுது தமிழர் தாயகமான காத்தான் குடியில் தனித்த அரபு அரசை நிறுவ முற்பட்டுள்ள முஸ்லிம்களைத் தமிழர் என நாம் எப்படி ஏற்க முடியும்? தொப்பி போட்டால் ஒரு பேச்சு, தொப்பி கழட்டினால் வேறு ஒரு பேச்சு என அரசியல் செய்ததோடு, எமது இயக்கத்தை உடைத்துப் போரின் வெற்றியை எதிரிக்குப் பறித்துக் கொடுத்த இவர்களுக்காக நாம் ஏன் போராட வேண்டும்?


அன்று வடக்கு கிழக்கு வேண்டும்


இன்று வடக்கு கிழக்கு வேண்டாம்

எங்களைக் காட்டிக் கொடுத்து, அமைச்சு மற்றும் மாகாண சபை ஆளுநர்கள் பதவிகளைப் பெற்றுத் தமிழர் நிலங்களையும், வளங்களையும் கொள்ளை அடிக்கும் ரிஷாத் பதியுதீன் ஹிஸ்புல்லா போன்றவர்கள் ஒருவரா? இருவரா? எத்தனை ஆயிரம் பேர் தமிழின அழிப்பில் ஈடுபட்டுள்ளனர்?

தமிழ் சிங்களப் பெண்களைக் களவாகக் கருத்தடை செய்த வைத்தியர் இஸ்லாமியர் இல்லையா? போரின் உச்சக் கட்டத்தில் வெளியேறிய தமிழ் பெண்களை கருத்தடை செய்த அரச வைத்தியர் யார்?

முஸ்லீம்கள் தெற்கிலிருந்து 16ம் நூற்றாண்டில் வந்த போத்துக்கேயரினால் தென் இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட பொழுது, கண்டிய மன்னரால் கிழக்கு மாகாணத்தில் குடியமர்த்தி, தமிழ்ப் பெண்களை மணந்து, பெருகிய இனம் தான் கிழக்கில் வாழும் இஸ்லாமியர்கள். அவர்கள் தங்களின் தாயையும், தமிழையும் மறுதலிப்பது அவர்களது துரோகத்தின் உச்சக் கட்டம். எனவே, அதுபற்றிய கவலை தமிழ் இனத்துக்கு இருக்க முடியாது.

இனிமேலும் தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் என்று உறவு கொண்டாடி எமது தாயகத்தை அரேபியருக்கும், வந்தேறி வணிகர் கூட்டத்துக்கும் தானம் கொடுத்து விட்டு ஈழத் தமிழ் இனம் அடிமைச் சேவகம் செய்ய முடியாது.

தமிழர் தலைமை அவர்களுக்கு ஒரு முடிவான பதிலைக் கூறிக் கைகழுவ வேண்டியத் தருணம் வந்து விட்டது. ஆரிய, பௌத்த, சிங்களம் இன அழிப்பைச் செய்வதற்குத் துணை போன இனத்தை முற்றாக, முடிவாக விடை கொடுத்து அனுப்ப வேண்டும். இனி சிங்களப் பேரின வாதம், அவர்களைக் கவனிக்க தமிழ் இனம் தடையாக இருக்கக் கூடாது.

(தொடரும்)



# Importas

Cash & Carry

தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...



## பேர்ண் நகரில்
# புதிய உதயம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
"இம்போட்தாஸ்" நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது

**Kranichweg 8, 3074**
**Muri Bei Bern**
**☎ 031 951 24 44**

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

# உளம் திறக்கும் உண்மைகள்

“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

## இருள்

காடுகளை விட்டு
வெளியேவந்துவிட்டோமே தவிர,
எண்ணங்கள் இன்னமும்
இருளாகவே இருக்கிறது.



## இயற்கை

இயற்கைக்கு
அடங்கவும் தெரியும்;
அடக்கவும் தெரியும்;
ஆனால், மனிதரைப் போல அது
ஒருபோதும் மார்தட்டுவதில்லை.

## எது தாய்மொழி

மொழியழிந்து போகிறது என்று
முணுமுணுப்பவர்கள் பலர்.
பிள்ளைகளுக்குச் சூட்டுவது
வடமொழிப் பெயர்.
அட! உங்கள் கவலை
வடமொழி அழிவது பற்றியா..?





## விலங்கு

கைவிலங்குகளை உடைப்பது
இலகுவானது.
மனவிலங்கை உடைப்பதுதான்
கடினமானது.

## கடவுள்

கல்லைக் கடவுளாகக்
காண்பதாலோ என்னவோ....
கல்லாகவே இருக்கிறது
வணங்குவோர் மனம்



# கரும்புலி

சாவுக்குத் தேதி குறிக்கும் சரித்திரம்.
சந்தகத்தை மேனியிற் கட்டிய சந்தனம்.
வீதியுலாவுக்காக வெளியில்
வராத விக்கிரகம்.
உயிர்மூச்சை ஊதிவிடும் உன்னதம்.
அடிமுடியை அறியமுடியாத அற்புதம்
தென்றலும், புயலும் சேர்ந்ததான கலவை.

இவர்களை எழுதத் தொடங்கினால்...
எந்தமொழியும் தோற்றுப்போகும்.
வார்த்தைகள் வறுமை அடையும்
உளவியலாளர்கள் உள்ளே புகுந்தாலும்
வெறும்கையோடுதான்
வெளியே வருவார்கள்.
கற்பனைக் கவிஞர்கள் கவிதை
எழுதினால் அற்புதம் என்பார்கள்
அடுத்தவார்த்தை வராது.

சித்திரக்காரர்களும்
தீப்பிழம்பைத்தானே தீட்டமுடியும்.
பக்கத்திலிருந்து பழகியவர்கள் கூட
குறிப்புக்கள் மட்டும் தான் கூறமுடியும்.
ஆழத்தோண்டினாலும்
மூலவேர் தெரியாது.
சமுத்திர நீரை அகப்பையால்
அள்ளி அளக்க முடியுமா?
ஓடும் முகிலை ஏணிவைத்து
எட்டித் தொட முடியுமா?
எதிரியின் எந்தவலுவும் - இறுதியில்
இவர்களிடம் சரணடையும்.
கடைசி நொடிவரை சிரித்தபடி திரிவர்.

மறுநாள்
வெடித்த செய்தி வெளிவரும்போது
ஜாதகமும், சோதிடமும்
தங்களுக்குத் தாங்களே
தீமூட்டிக் கொள்ளும்
காலால் நடந்து, வாயால் மொழிந்து,
கையால் தலைவாரிக் கொண்டு
எல்லோரையும்
போலவேதான் இவர்களும்.
உள்ளே எரியும் விடுதலைக்
கனல்மட்டும் வேறுபட்டது.

உயிர்ப் பூவை கிள்ளி எடுத்து
விடுதலைக்கு விலைகொடுக்கும்
வித்தியாசமானவர்கள்.
கிட்ட நெருங்க முடியாத
இலக்குகளைக்கூட தொட்டு
அசைத்துவிடும் துணிச்சலர் இவர்.

முதுகில் வேர்க்குரு போட்டாலே..
முந்நூறு மருந்துகள் தேடும் உலகில்
சாவைத் தம் தோள்களில் சுமந்து
நொடிகளை கணக்கிட்டு நகரும்
நூதனங்கள் காற்றிலும், நீரிலும்
இவர்கள் கலக்கும்போது
காற்றுக்கு வேர்க்கும்.
நீர் நெருப்பாகிவிடும்.
இவர்களுக்கு; சூரியன்
கைகளுக்கு எட்டும் தூரம்தான்.
பசுபிக் சமுத்திரம் முழங்கால் ஆழம்.
கரும்புலிகள்;
தலைவன் தலைவாரிவிடும் புயல்கள்.
தாயை நேசிக்கும் அளவுக்கு
தலைவனையும் நேசிப்பவர்கள்.
தாயகத்தை மட்டும் பூசிப்பவர்கள்.
ஆவிபிரியும்
அடுத்த கணம்பற்றிய அச்சம்
இவர்களின் அகராதியில்
அச்சிடப்படுவதில்லை.

யுலை 5.1987
கருமைக்கும் பெருமை
வந்த நாள்.
புலியொன்று முதல்
கரும்புலியான தினம்
நெல்லியடியில்
"மில்லர்" புதிய வரலாற்றை
தொடக்கிய நாள்.
"எல்லாம் சரி வடமாராட்சி
எமது கட்டுப்பாட்டில்"
கொழும்புக்குச் செய்தி
அனுப்பியவனின்
வாய் மூட முன்னர்
செவிப்பறைகள் கிழிந்தன.

சாவு நேரே ஓடிவந்து
முகத்தில் சந்திக்குமென்று
எதிரி எப்படி எதிர்பார்த்திருப்பான்.
"உயிராயுதம்" வலுவானது.
கரும்புலிகள் தேவை அறிந்து
செல்பவர்களே அன்றி சாவை
விரும்பிச் சந்திப்பவர்களல்ல..
இவர்கள் வசந்தம் தழுவாத
கொடிகளோ, முகில்கள் முத்தமிடாத
மலைமுகடுகளோ அல்ல.
இதயம் இரும்பாலானவர்களும் அல்ல.
பனியாய் உருகும் நெஞ்சுக்கும்
பாகாய் இனிக்கும் வார்த்தைகளுக்கும்
உரிமையாளர்கள்.

வெடித்த பின்னரும்
இவர்கள் எல்லோரும்
வெளிச்சத்துக்கு வருவதில்லை.
சுவரொட்டியில்
சிரிப்பவர்கள் சிலர்தான்.
"நடுகல் நாயகர்கள் "
ஆகும் வாய்ப்பும்
எல்லோருக்கும் ஏற்படப்
போவதும் இல்லை. கல்லறை கூட
இல்லாத காவியமாய்
வாய்விட்டு சொல்லியழும்
வாய்ப்பும் இல்லாமல்
சிலருக்கு வெளியே தெரியாத
வேரின் வாழ்வு.

பலருக்கு மரணம் வாழ்வின் முடிவு
கரும்புலிகளின் ஜனனம் மட்டும்
மரணத்தில்தான் ஆரம்பம்
கால நதியில் - இவர்கள்
ஓடிக் கரைய மாட்டார்கள்.
மற்றவர்களுக்கு
இனி என்ன செய்வதுதென்று
தலைவெடிக்கும் போதுதான்
இந்த சுகந்த ஊதுபத்திகள்
உடல்வெடித்துப் போகிறார்கள்.

"ஊரறியாமலே உண்மைகள்
கலங்கும் ஒருபெரும் சரித்திரம்
ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே விழுதினைப்
புரியும் வெடிமருந்தேற்றிய
வேங்கையைத் தெரியும்"
பூகம்பத்தை போத்தலில்
அடைத்தது போல வந்தவரிகளில்
வென்றவரிகள் இவை.
கரும்புலிகளுக்கு
காணிக்கை என்ன?
கண்ணீரா? கல்லறையா?

இல்லை.
எதுவுமே இல்லை
நெஞ்சின் நினைவே
நெடிய கோபுரம்.
கரும்புலி அடிமுடி
அறிய முடியாத அற்புதம்!

**புதுவை இரத்தினதுரை**

அகர
கவிக்களம்....



பூமிபுத்திரன்

# மோடியின் வெற்றி இந்தியாவின் வெற்றியா? இந்துத்துவாவின் வெற்றியா?

இந்திய மக்களவைத் தேர்தலில் மோடி தலைமையிலான பா.ஜா.க. கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றுச் சாதனைப் படைத்துள்ளது. வட மாநிலங்களில் பா.ஜா.க. பெற்றுள்ள வெற்றியும், கர்நாடகா தவிர்த்து, தென் மாநிலங்களில் அக்கட்சி பெற்றுள்ள தோல்வி(?)யும் இந்திய மக்களின் சிந்தனைப் போக்கில் நிலவும் தெளிவானப் பிளவைப் பிரதிபலித்திருக்கின்றது.

தங்களை யார் ஆட்சி செய்ய வேண்டும்? என்பதை மக்களே தீர்மானிக்கின்றார்கள். எனவே, மக்களின் தீர்ப்பை மதித்தே ஆக வேண்டும். ஆனால், மக்களை முடிவெடுக்கச் செய்யும் காரணிகள் யாவை? என்பது பற்றிய ஆய்வு அவசியமானது.

இந்தியாவில் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே, மோடி அரசாங்கம் பற்றிய எதிர்மறையான சிந்தனை, மக்கள் மத்தியில் நிலவத் தொடங்கியிருந்தது. பண மதிப்பிழப்பு மற்றும் புதிய ஜி.எஸ்.டி. வரி விதிப்பு காரணமாக, சமூகத்தின் சகலபடி நிலையில் வாழும் மக்களும் பெரும் பாதிப்பை அடைந்திருந்தனர். இந்துத்துவா சிந்தனையின் எழுச்சி, மதச் சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள், நெருக்குதல்கள் மற்றும் தலித் மக்கள் மீதான வன்முறை என்பவற்றோடு,

மோடியின் தொடர் வெளிநாட்டுப் பயணங்கள், தேவைக்கும் அதிகமான செலவினம், உள்நாட்டு இயற்கை வளங்களை பல்தேசிய நிறுவனங்களுக்குத் தாரை வார்த்தல் எனப் பல்வேறு விடயங்களில் மோடி அரசாங்கம் மீதான வெறுப்புணர்வு மக்கள் மத்தியில் நிலவியது.

ஆனால், தேர்தல் நெருங்க நெருங்க பா.ஜா.க. மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என்ற திட்டமிடப்பட்ட பரப்புரைகள், ஊடகங்கள் ஊடாக மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டன. பல்தேசிய வணிக நிறுவனங்கள் பணத்தை வாரியிறைத்தன. 'மோடி அசைக்க முடியாத மனிதர்' என்ற பிம்பம் கட்டமைக்கப்பட்ட அதேவேளை, எதிர்க் கட்சிகள் மத்தியில் உள்ள பிளவுகள் ஊதிப் பெருப்பிக்கப் பட்டன. குறிப்பாக 'ராகுல் காந்தி அவர்கள் காங்கிரசுக்குப் பொருத்தமில்லாதத் தலைவர்' என்ற இட்டுக் கட்டப்பட்ட செய்தி மீண்டும் மீண்டும் ஊடகங்களில் பேச்சுப் பொருளாகியது.

இதேவேளை, எதிர் கட்சிகளின் சார்பில் யார் பிரதமர் வேட்பாளர்? என்ற கேள்வியில் உருவான ஒற்றுமையின்மை எதிர்க் கட்சிகளின் மிகப் பெரிய பலவீனமாக அமைந்தது.

இத்தகைய நிலைமையின் விளைவால் பா.ஜா.க. கூட்டணிக்கு மிகப் பாரிய வெற்றி கிடைத்துள்ளது. ஆனால், தமிழகத்தில் ஒரு இடத்தைக் கூட பா.ஜா.க.வால் பெற முடியாமற் போய் விட்டது. மத்தியில் பெற்ற இமாலய வெற்றி ஏற்படுத்திய மகிழ்ச்சியை விடவும், தமிழகத்தில் கிடைத்த தோல்வி, பா.ஜா.க. தலைமையிடம் மிகப் பெரிய எரிச்சலை ஏற்படுத்தி உள்ளமை புரிகிறது. தமிழகத்தில் ஏற்பட்ட தோல்விக்கு அ.தி.மு.க. எதிர்ப்பலையே காரணம் என்பது போல பா.ஜா.க. தமிழகத் தலைவர்களும், அவர்களது நலன் விரும்பிகளும் பேசத் தொடங்கியுள்ளனர். இத்தகைய நிலையில், இது போன்ற விமர்சனங்களுக்குப் பதில் சொல்லியே ஆக



ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

R.RAGUNATHAN
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

T. ANBALAGAN
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

Lyca TV · VALUTRANS Money Transfer · Ria · MoneyGram · TEMPO Money Transfer

IBAN : DE55 3907 0024 0474 1153 00 BIC : DEUT DE DB 390

வேண்டிய நிலைமை அ.தி.மு.க. தரப்பிற்கு உருவாகியுள்ளது.

கூட்டணிக் கட்சிகளுக்கு இடையேயான இத்தகைய மோதல் போக்கு மேலும் நீடிக்குமாக இருந்தால், ஒருகட்டத்தில் பா.ஜா.க.வுடனான உறவைத் துண்டிக்க வேண்டிய கட்டத்திற்கு அ.தி.மு.க. வரலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. மாநிலத்தில் தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், கட்சியின் தலைவர்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் பா.ஜா.க.வின் தயவை எதிர்பார்த்து நிற்கும் நிலையில் அ.தி.மு.க. அத்தகைய விசப் பரீட்சையில் இறங்குமா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயம்.

நடந்து முடிந்த இந்திய மக்களவைத் தேர்தலின் பின்னர், இந்தியத் தேர்தல் ஆணையம் மிக மோசமான விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் ஆளாகியிருக்கிறது. மத்தியில் ஆளுங் கட்சிக்குச் சார்பாக தேர்தல் ஆணையம் நடந்து கொண்டுள்ளது எனும் விமர்சனம் ஒருபுறமிருக்க, மின்னணு வாக்களிப்பு இயந்திரங்களின் நம்பகத் தன்மை குறித்தும் பரவலானக் கேள்விகள் எழுப்பபட்டு உள்ளன.

நவீன உபகரணங்களின் கண்டுபிடிப்புக்கள் மனித நாகரீக வளர்ச்சியின் அடையாளமாகக் கொண்டாடப்படும் காலகட்டத்தில் மின்னணு வாக்களிப்பு இயந்திரங்களை அகற்றிவிட்டு, உலகின் பெரும்பாலான நாடுகளில் இருப்பதைப் போன்று கடதாசி மூலம் வாக்களிப்பு மேற்கொள்ளப்பட்டு கைகளால் ஒவ்வொன்றாக எண்ணப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை எதிர்க் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

எதிர்க் கட்சிகளின் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக சுவாரஸ்யமான ஆதாரங்கள் ஒரு சில முன் வைக்கப்படுகின்றன. நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் ஆளுங்கட்சி வெற்றி பெற்ற பல இடங்களில் ஆளுங்கட்சி வேட்பாளரும், எதிர்க்கட்சி வேட்பாளரும் எந்தவித வித்தியாசமும் இன்றி ஒரேவிதமான எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்றுள்ளனர். எடுத்துக் காட்டாக இந்த அட்டவணையை எதிர்க் கட்சிகள் சமர்ப்பிக்கின்றன.

**போலாசிங்**

பா.ஜா.க. 2,11,820 - காங்கிரஸ் 1,40,295

**மேனகாகாந்தி**

பா.ஜா.க. 2,11,820 - காங்கிரஸ் 1,40,295

**உபேந்த்ரா நர்சிங்**

பா.ஜா.க. 2,11,820 - காங்கிரஸ் 1,40,295

**ஹாரிஷ்திரிவேதி**

பா.ஜா.க. 2,11,820 - காங்கிரஸ் 1,40,295

**சத்யபால் சிங்**

பா.ஜா.க. 2,11,820 - காங்கிரஸ் 1,40,295

**சங்கமித்ராமவுரியா**

பா.ஜா.க. 2,11,820 - காங்கிரஸ் 1,40,295

**கன்வர் பரதேண்ட்ரசிங்**

பா.ஜா.க. 2,11,820 - காங்கிரஸ் 1,40,295

இது தவிர சுமார் 370 தொகுதிகளில் அளிக்கப்பட்ட வாக்குகளுக்கும், வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளுக்கும் இடையில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. சில இடங்களில் அளிக்கப்பட்ட வாக்குகள் பெறப்பட்ட வாக்குகளைவிட அதிகமாகவும், சில இடங்களில் குறைவாகவும் உள்ளன. தேர்தல் ஆணையம் வெளியிட்டத் தகவல்களை வைத்தே இதனைச் சுட்டிக் காட்டும் எதிர்க் கட்சிகள் ஒட்டு மொத்த தேர்தலுமே பா.ஜா.க.வைப் பதவியில் அமர்த்தச் செய்யப்பட்ட மோசடி எனக் குற்றஞ் சாட்டுகின்றன.

தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி பெற்ற வெற்றி மு.க. ஸ்டாலினின் தலைமைத்துவத்தினை ஸ்திரப்படுத்தியுள்ள அதேவேளை, அவரது தலைமைத்துவம் தொடர்பாக எதிர்க் கட்சிகள் முன் வைத்து வந்த விமர்சனங்களையும் தவிடுபொடியாக ஆக்கியிருக்கின்றது. இந்த வெற்றி




பெரியாரின் கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றி, திராவிடக் கொள்கைகளின் வெற்றி எனக் கொண்டாடப்படும் நிலையில் அதை ஏற்றுக் கொள்வதற்கு பா.ஜ.க. தயாரில்லாததைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

“தி.மு.க.வின் 37 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதற்குமே பிரயோசனம் அற்றவர்கள், இவர்களால் உருப்படியாக எதனையும் சாதிக்க முடியாது” என்பது போன்ற விமர்சனங்களை முன்வைத்துள்ள தமிழக பா.ஜ.க. பிரதிநிதிகள், தமக்கு வாக்களிக்காத தமிழ் மக்களை வெருட்டும் முயற்சியிலும் இறங்கி உள்ளனர். “பா.ஜ.க.விற்கு, வாக்களிக்காதமையின் பலனை தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டி வரும்” எனத் தொடர்ச்சியாக அவர்கள் தெரிவித்து வரும் கருத்துகள், தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

கடந்த முறைகளையும் விடவும் இம்முறை இந்தியத் தேர்தல் தொடர்பான செய்திகள் சமூக ஊடகங்களில் அதிகமாகப் பகிரப் பட்டமையை அவதானிக்க முடிந்தது. தவிர, சமூக ஊடகங்களில் தீவிர ஈடுபாடு கொண்ட ஈழத் தமிழர்களும், இது தொடர்பில் அதிக ஈடுபாடு காட்டினர். கணிசமானப் பதிவுகள் தமிழ் நாட்டைப் பொறுத்த வரை நாம் தமிழர் கட்சிக்கு ஆதரவாகவும், ஒட்டுமொத்த இந்தியாவைப் பொறுத்த வரை காங்கிரஸ் கட்சிக்கு எதிரானதாகவும் இருந்தன.

ஒரு கட்சியை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் அவரவர் விருப்பம். எனினும், காங்கிஸ் கட்சியை எதிர்ப்பது என்ற பெயரில் ஒட்டுமொத்த மானுடத்துக்கே எதிரான கொள்கைகளைக் கொண்ட வலது சாரித் தீவிரவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியையும், அதன் மூளையாகச் செயற்படும் ஆர்.எஸ்.எஸ்.ஸையும் ஆதரிப்பது என்பது எந்தவகையில் புத்திசாலித் தனமானது?

“ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்த காங்கிரஸை மண் கவ்வ வைத்த பா.ஜா.க.விற்கு வாழ்த்துகள்” என்ற தொனியில் ஒரு சிலர் பாராட்டுத் தெரிவித்திருந்தனர். காங்கிரசுக்கு எதிரான தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்த அத்தகையவர்கள், மதச் சார்பின்மைக்கு எதிரான அணியை உற்சாகப்படுத்துவதைப் புரிந்து கொள்ளவில்லை. கிட்டத்தட்ட 1930களில் யேர்மனியில் ஹிட்லரும், இத்தகைய வரவேற்பைப் பெற்றே ஆட்சிக் கட்டிலைப் பிடித்தார். பின்னாளில் என்ன நடந்தது? என்பது வரலாறு.

மொத்தத்தில் பா.ஜா.க. தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணிய சுவாமி சொன்னதைப் போல, “பா.ஜா.க, பெற்ற வெற்றி மோடிக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல. இந்துத்துவாவுக்குக் கிடைத்த வெற்றி.” ஆகவே, இந்த வெற்றி இந்தியாவில் வாழும் சிறுபான்மை மக்களுக்கும், இந்துமத வர்ணாசிரம தர்மத்தின் விதிகளுக்கு ஏற்ப தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், இந்தித் திணிப்பையும், இந்துமதத் திணிப்பையும் எப்போதும் எதிர்த்து நிற்கும் தமிழக மக்களுக்கும் எதிரானதே!. எனவே, இந்த வெற்றியை வரவேற்பது எமக்கு எதிரான வெற்றியைக் கொண்டாடுவதற்குச் சமனானது.





வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்ரொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

தேவன்

# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி

திரைப்பட இயக்குநர் ரஞ்சித் அவர்களின் வாய் மூல அறிக்கையின்பால், ஏராளமான பிரதிபலிப்புகள் நிகழ்ந்தேறி விட்டன. இவையெல்லாம் அவசியத்தை உணர்த்தும் கருத்துருவாக்கங்கள் தானா எனத்தேடினால்? இல்லவே இல்லை....!. பலர் ரஞ்சித்தைத் தூற்றி எழுதுவதில் குறியாயிருக்கிறார்கள். எனக்கென்னவோ அவர்களின் தேவையை நாம் பூரணப் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்ற உளக்கிளர்ச்சியே ஏற்படுகிறது.

மாமன்னன் ராசராச சோழன் பற்றிய ரஞ்சித்தின் கருத்து அவருடையது மட்டுமல்ல, ஆண்டாண்டு காலமாக தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்கள் மீது படையெடுக்கின்ற ஆரியர்கள் மற்றும் திராவிடர்களின் ஒரு பண்பாட்டு, படையெடுப்பு உத்தி என்பதை நாம் உணரவேண்டும் என்பதே இந்த நேரத்தில் அவசியம்.

கலாச்சாரம் -



பண்பாட்டில் செழித்தோங்கி இருந்த தமிழ் இனத்தில், ஆரியர்கள் படையெடுக்கும் போது, நாம் புனிதமாகக் கருதிய விழுமியங்களின் மீது, ஆரியர்கள் தனக்கு சாதகமான கதைகளைக் கூறி, நமது அடையாளங்களைத் தனதாக்கி கொண்டார்கள். தமிழர்களின் கோயில்கள், தமிழர்களின் நம்பிக்கைக்குரிய வரலாற்று பெருங் காலத்தைகள் என எத்தனையோ உண்டு. இதற்கு சற்றும் மாறாமல் திராவிடர்கள், தமிழர்களின் பண்பாட்டின் மீது படையெடுத்தவர்கள்.



தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாகக் கருதியத் தமிழர்களின் இறையியல் மீது, "கடவுள் மறுப்புக் கொள்கையைப் பேசி, தமிழர்களை அங்கிருந்து நகர்த்தியது. உயிராம் தாய் மொழித் தமிழை "காட்டுமிராண்டி மொழி" என்றது. உலகிற்கே அறிவியலை



Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும்
உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்
மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...


திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து
வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை
அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com


ImmoFinance
Suisse GmbH
Contact :
Selvaratnam Mathan
புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்
076 303 22 16
mathan@gmx.ch

(திருக்குறள்), வானியல் ரகசியங்களை(வியாழன் மாலை) நூலாகப் படைத்தத் தமிழை, அறிவியல் அறிவு அற்ற மொழி என்பது என அடுக்கிக்கொண்டே செல்லலாம். இதன் தொடருகின்ற நீட்சியே இயக்குனர் ரஞ்சித் அவர்களின் ராசராசசோழன் பற்றிய கருத்துகள்.

தமிழர்களை வெல்லமுடியாத ஆரியர்கள், வர்ணா சிரமம் கொண்டு வீழ்த்தினார்கள். திராவிடர்கள் நம்மை அந்தப் பண்பாட்டு விழுமியத்தில் இருந்து வெளியேற்றி, வீழ்த்தினார்கள். இவர்கள் நமது விழுமியங்களைச் சிதைக்கும் முன்பு, அல்லது அந்த அடையாளங்களின் மீது தவறானக் கருத்தியலை வைப்பதற்கு முன்பு, அந்த கருத்தியல் மீது சிறிதேனும் வாசிப்பு இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

இராசஇராசச்சோழன் யார்? அவர் என்ன செய்தார்? எப்படி தனது குடிகளை ஆட்சி செய்தார்? என்பதையெல்லாம் எவரும் இங்கே மறைத்துவிட முடியாது. ஏனெனில் பிற்கால சோழர்களின் வரலாறு அனைத்தும் கல்வெட்டுகளாக, செப்பேடுகளாக, தமிழர்களின் பிற்கால இலக்கியங்களில் தரவுகளாக, பலநூறு முனைவர் பட்ட ஆய்வுகளாக வெளிவந்து இருக்கிறது. குறிப்பாக தஞ்சை பெரியக் கோவிலைச் சுற்றியுள்ள ராஜராசனால் உருவாக்கப்பட்ட 83 கல்வெட்டுகள், கரந்தை செப்பேட்டு கல்வெட்டுகள் 42, மேலும் முனைவர் நீலகண்ட சாஸ்திரிகளின் முற்கால சோழர்களின் வரலாறு, சதாசிவ பண்டாரத்தாரின் “பிற்கால சோழர்களின் வரலாறு”, முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்களின் “இராராசேச்சரம்” என ஆயிரக் கணக்கான நூல்கள் இங்கே கிடைக்கிறது. இதில் எதை வைத்து இயக்குனர் ரஞ்சித் அப்படி பேசினார்? என்பதை, அவரிடமே கேட்கவேண்டும்.

தொடர்ந்து திராவிடத்தின் குரல், இராசஇராசசோழன் பார்ப்பன அடிமை என்று பரப்புரை செய்வார்கள். ஆனால் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசர் பாடிய தமிழர்களின் வழிபாட்டில் இலக்கியங்களை பார்ப்பனர்களின் கொட்டத்தை அடக்கி, அதை மீட்டு ஓலைச்சுவடிகளாக இருந்தவற்றை, நவீனப்படிகளாக மீட்டவன் மாமன்னன்இராசராசச்சோழன். இதைப் பற்றி திராவிடர்களிடம் பேசினால் அமைதியாவார்கள்.

தமிழர் வரலாற்றில் முதன்முதலில், பஞ்சாயத்து அமைப்புமுறையை உருவாக்கி, அதில் ஜனநாயகமுறைப்படி குடஓலை அமைப்புமுறையை உருவாக்கி, அதிகாரத்தை பரவலாக்கிய முதல் மன்னன் இராசராசச்சோழன்.

நிலங்களின் உரிமையை வரையறை செய்யும்போது, சமுதாயத்தில் உழைக்கும் மக்களுக்கும், வர்ணா சிரம கோட்பாட்டின்



அடிப்படையில், கடைநிலையில் இருக்கும் மக்களுக்கு இலவசமாக நிலங்களை வழங்கியும், அதே நேரத்தில் பார்ப்பனர்களுக்கு நிலத்தின் மீது வரியினை விதித்து, 3 வருடத்திற்குள் அவர்கள் வரியினை செலுத்தாவிட்டால், நிலம் நிர்வகித்து வந்த பார்ப்பனர்களிடம் இருந்து கையாக்கப்படுத்தபட்டது இராசராசனால் என்பதை, கரந்தை செப்பேடுகள் குறிப்பு உணர்த்தி நிற்கிறது. சுதந்திரம் பெற்ற இந்தியாவில் அண்ணல் அம்பேத்கார் செய்த இடஒதுக்கீடு முறையை, நில மானியத்தை, பலநூறு ஆண்டுகளுக்கும் முன்னே செய்து, சமூகநீதி காத்த மாமன்னன் இராசராசன் செய்து இருக்கிறான் என்பதை, அண்ணல் அம்பேத்காரை வழிகாட்டி என சொல்லிக்கொள்கிற ரஞ்சித் சாடுவது ஏனோ?

வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் தனது படையணியில், வர்ணாசிரம அடிப்படையில் தாழ்த்தப்பட்ட பெண்ணாகிய குயிலியைத் தளபதியாக அமர்த்தினார் என்பார்கள். ஆனால், இராசஇராசன் படையணியில் இருந்த முக்கிய தளபதிகள் பலர், வர்ணாசிரம அடிப்படையில் தாழ்த்தப்பட்வர்கள் (இராசராசன் காலத்தில் சாதிய பிரிவினை இல்லை, பொருளாதார பிரிவினை இருந்தது, பொருளாதார பின்தங்கிய நிலையில் இருந்தவர்கள், நாயக்கர்கள் காலத்தில் சாதிய பாகுபாட்டிற்கு உள்ளானார்கள்) என்பதும், அந்த வீரர்களுக்குக் கொடையாக கொடுத்த ஊர்களே இன்றும் தஞ்சையை சுற்றி உள்ள பகுதிகளும், அவர்கள் நிறைந்து வாழும் விளைநிலங்களும் என்பதை ரஞ்சித் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அறியவேண்டும் என்று விரும்பினால், கரந்தை செப்பேடுகளின் குறிப்புகளை வாசிக்கவும்.

தஞ்சைப் பெரிய கோவில் நிர்மாணிக்கும் போது, அந்த கட்டிடப்பணியில் இருந்த முக்கியமானவர்களில் இருவரான "இலத்தி சடையன் கண்ட ராதித்த பெருந்தச்சன்" (இரண்டாம் நிலை கட்டிட கலைஞன்) மற்றும் கல்வெட்டில் நிகழ்வுகளைப் பதித்த சாத்தான்குடி வெள்ளாளன் இரவி போன்றோர்கள், அந்த காலத்தில் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தவர்கள் என்பதும், இந்த இருவரில்




# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

Double Horse

Bringing Health to Life

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · Patak's Original · Laila

# AMMA's food

## Dortmund

அன்பான உபசரிப்போடும், ஆனந்தமாய் கொத்து ரொட்டி, இடியாப்பக் கொத்து,
புட்டுக் கொத்து, இட்லி, தோசை, மசாலா தோசை, பிரியாணி, பாலப்பம்
இன்னும் பல வகையான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கேற்றவாறு
உண்டு மகிழ்ந்திட என்னும் உங்கள் நினைவில் நிற்கும்







## அம்மா’ஸ் உணவகம்






**0049 1776 794 261**
**0049 231 00 898 691**

ktheepan@hotmail.de
www.ammas-food.de
AmmasFood

**Rheinische Str-80A, 44137 Dortmund, Germany**

ஒருவருக்கு இராசராசச்சோழன் வெற்றிலை, பாக்கு, எச்சிலை சுமந்தான் என்பதும் வரலாறு. இதுபற்றி ரஞ்சித் போன்றவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

மேலும், சிவன்கோயிலுக்கு தானமாக வருகின்ற ஆடு, மாடுகளைப் பண்ணை (42 ஆடுகள் அல்லது மாடுகள்) மற்றும் பட்டி வைத்து (4 பண்ணைகள் இணைத்து ஒரு பட்டி) அதைப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு கொடுத்து, பண்ணையில் பெருகுகின்ற உயிரினங்களை மேய்ப்போருக்கு விற்க உரிமை உண்டு எனவும், ஒரு பண்ணை முறையை ஏழைகளுக்கு உருவாக்கியவன் மாமன்னன் இராசராசச்சோழன். மேலும், தஞ்சை மாவட்டத்தின் மேட்டு நிலப்பகுதியாகிய வல்லம் என்ற ஊருக்கு மேற்கே உள்ள, 18 பட்டிகள் (முத்தாண்டிபட்டி, அயொத்திப்பட்டி, செங்கிப்பட்டி, பளையப்பட்டி, கூனம்பட்டி, கொாசவப்பட்டி, கரியப்பட்டி, கொப்பன்பட்டி, ஆச்சாம்பட்டி, சோழகம் பட்டி, ராமுண்டாம்பட்டி, புதுப்பட்டி, ஆயிப்பட்டி, கல்லுப்பட்டி, சானுரப்பட்டி, சிதம்பரப்பட்டி, காதாட்டிப்பட்டி, ...) இராசராசன் காலத்தில் உருவான ஊர்கள் என்கிறது ஊர்களை பற்றிய செப்புப் பட்டயம். இதுபற்றி ரஞ்சித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

சரி, ரஞ்சித்திற்கு இப்போது என்ன வந்தது?. அன்று ஒருநாள் கொஞ்சம் கூட நாகரீகமே இல்லாமல், இயக்குனர்கள் மேடையில் "தமிழ், தமிழ்த் தேசியம் என்று பேசுகிற நீங்கள் முதலில் ஊரையும், சேரியையும் ஒன்றாக்கு" என்று முழங்கினார்கள். சரி, ஊரையும், சேரியையும் ஒன்றாக்குவோம் என்று நினைத்தால், அடுத்து சரியாக இரண்டு மாதம் கழித்து "தலித் அதிகமாக வாழுகின்ற தொகுதிகளை இனங்கண்டு, அங்கு தலித்துகளை வேட்பாளராக நிறுத்தி, வேலைசெய்யவேண்டும்" என்றார். என்னடா..? தமிழ்த் தேசியவாதிகளை ஊரையும், சேரிகளை ஒன்றாக்க சொல்லிவிட்டு, இவர் இப்படி பேசுகிறாரே...? என்று நினைத்தால், அது அண்ணன் திருமாவளவனுக்கு கொடுத்த நெருக்கடி என்பது பின்னர் தெரியவந்தவை.

இராசராசனுக்குப் பிறகு, பாண்டியர்கள், பிறகு முகலாயர்கள், பிறகு மராட்டியர்கள், பிறகு தெலுங்கர்கள் என எத்தனையோ நபர்களின் மீது அதிகாரம் கைமாறி பிறகு, வெள்ளைக்காரன் கையில் சென்றது. இப்படி இருக்க, உண்மையில் விவசாயிகளிடம் இருந்து நிலங்களை அபகரித்த மராட்டியர்கள், தெலுங்கர்கள் (கீழ்வெண்மணியில் கூலி உயர்வு கேட்ட போராடியவர்களை உயிரோடு கொழுத்தத்திய கோபாலகிட்டின நாயுடுவை நினைவில் கொள்க) இவர்களை எல்லாம் விட்டுவிட்டு, ரஞ்சித் நேரடியாக இராசராசன் பக்கம் வரக் காரணம் என்ன? உண்மையில் இவர்கள் தலித்துகளின் மீது அக்கறை உள்ளவரா? என்பதை கேட்டுக் கொள்வதோடு, வரலாற்றுப் பதிவுகளின் அடிப்படையில் இராசராசன் காலத்தில் பள்ளர், பறையர் என்ற பாகுபாடு இல்லை. ஏழை - செல்வந்தர், வைதீகர்கள் என்றப் பிரிவினை மட்டுமே இருந்தது என்பதும், அதன் பிறகு வந்த நாயக்கர்களின் காலத்தில்தான் சாத்தியப்படி நிலைகள் இங்கே விரிவுபடுத்தப்பட்டது என்பதை, வரலாற்றை உணர்ந்தவர்கள் அறிவார்கள்.

தமிழ் பெரும் அடையாளங்களைத் தமிழர்களிடம் இருந்து அபகரிக்க நினைப்பது, ஆரியர்களின் குணம். தமிழ்ப்பெரும் அடையாளங்களை அவமதித்து, அவற்றில் இருந்துத் தமிழர்களை வெளியேற்றுவது திராவிட குணம். தஞ்சை பெரியகோவிலை சென்ற வருடம் ஆரிய தூதுவன் பூச்சிய ரவிசங்கரை வைத்து அபகரிக்க நினைத்தான் ஆரியன். அது இயலாத போது அந்தத் தமிழ் பெரும் அடையாளங்களை, அந்த காலத்தில் இருந்தே அவமதித்து வரும் திராவிடர்களின் நீட்சியாகவே ரஞ்சித்தின் ஆதாரமென்ற உளறல்கள் என்பதை அறியலாம்.

ஊடகங்களின் கவனத்தை திருப்ப, எதையாவது உளறிக்கொண்டு தெரியும் இயக்குனர் ரஞ்சித் போன்றோர்களின் கனிவான கவனத்திற்கு...!

ஒடுக்கப்பட்ட மக்களின் நிலங்களை அபகரித்து, அவர்களை பண்ணைய அடிமைகளாக நடத்தி, அவர்கள் வணங்கி வந்த காந்தாரி அம்மன் கோவிலை இடித்து, மீண்டும் கோவிலை நிறுவ முயற்சித்தவர்களை கொலை செய்து, (12 மேற்பட்டோர்களை) இன்றுவரை சொந்த மண்ணிலேயே அகதிகளாக இருக்கும் குறிஞ்சாக் குளத்தின் கதை கொஞ்சம் கேட்கத் தயாரா? அங்கே காந்தாரி அம்மனுக்கு கோயில் கட்ட வேலை செய்வாரா? என கேட்கவேண்டும்.

அம்பேத்காரை கொண்டாடும் ரஞ்சித் அவர்கள், அம்பேத்கார் செய்ய நினைத்ததை, தனது ஆட்சிக்காலத்தில் செய்து முடித்த இராசராசச்சோழனை விமர்சிப்பதும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு என்று இரட்டை குவளை முறையை அறிமுகப்படுத்திய நாயக்கர்கள் காலத்து ஆட்சிமுறையை விமர்சிக்காமல், ஒடுக்கப்பட்ட படிநிலையில் இருந்து வந்து, கோவிலில் கல்வெட்டு வெட்டிக்கொண்டு இருந்த ஒரு கட்டிடக் கலைஞனின் எச்சில் குவளையை சுமந்த, பேரரசன் இராசஇராசனைக் குறைசொல்வதெல்லாம் அறியாமையின் வெளிப்பாடாக இருக்கும் என நான் நம்பவில்லை. ஆரிய-திராவிடக் கூட்டுசதியின் வாடகை வாய் என்று நான் நினைக்கிறேன்.

இயக்குனர் ரஞ்சித் அவர்கள், இதுபோன்ற செயல்களை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும், தமிழர்களின் பண்பாட்டு, அடையாளங்களின் மீது ஆதரமற்று அவதூறுகளை வீசுவதை கைவிடவேண்டும் எனவும், இராசஇராசன் பற்றிய ரஞ்சித்தின் கருத்திற்கு நாம் அனைவரும் கண்டனத்தைப் பதிவுசெய்வதையும், அதேவேளை இதையே சாக்காக வைத்து, இனிவரும் தலைமுறைக்கு இராசராசச் சோழன் பற்றிய செய்திகளையும் பரப்பிவிடவேண்டும். யாராவது எமக்குக் குழி வெட்டினால், அதற்குள் அவர்களையே போட்டுப் புதைப்பதென்பது அதைத்தான்.

**மூலம் : தலித்தும் தமிழ்நாடும், இராசஇராசச்சோழன். - வீரத்தமிழர் முன்னணி.**




**அவனா? இவன்!**

# அந்த நாள் ஞாபகம்!



அவனுக்கும், மருத்துவ மனைகளுக்கும் ஒரு நெருங்கிய சம்பந்தம் இருந்தே வந்துள்ளது. அவன் பள்ளிக் கூடங்களில் படித்து, அறிந்து கொண்டதை விட, அதிகமான அனுபவப் பாடங்களை மருத்துவ மனைகள்தான் அவனுக்கு கொடுத்துள்ளன.

அப்படி அவன் 1953ல் யாழ்ப்பாணம் அரச மருத்துவமனையில் உள்ளக நோயாளியாக சுமார் 20 நாட்கள் தங்கி, மருத்துவம் பெற வேண்டி வந்தது. 16 வயதுப் பையனாக, பள்ளிப் பாடங்களைத் தவிர வேறு எதனையும் அறிந்திராத அவனுக்கு, அங்கு இரவு பகலாக கிடைத்த உலக பாடம் மிகப் புதுமையானது. ஆண், பெண் உறவுகள் பொய், புரட்டு, பித்தலாட்டம் பற்றிய பலரின் அனுபவங்கள், வயது பேத வித்தியாசமின்றி இரவு பகல்இரக சியங்கள், அவனுக்கு முதல் முறையாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்த அந்த நாட்களின் நினைவுகள், பசு மரத்தாணி போல இன்றும் நினைவில் நிற்கின்றன.

பால் உணர்வு, பாலியல் அறிவு பற்றியே பேசப்படாத பள்ளிப் படிப்பு, திருக்குறள் பாட நூலாக வகுப்பில் படிக்க வைத்த பாடத் திட்டம், வள்ளுவர் பேசிய காமத்துப் பால் குறள்களில் எந்த ஒரு குறளும் அவனுக்கு ஆசிரியர் படிப்பிக்க முன்வந்தது கிடையாது. அப்படியான இருட்டறை வாழ்வில் இருந்தவனுக்கு, யாழ் மருத்துவமனை பாடம் நடத்தியது.

இரவு 7 மணியாகி விட்டால், விடுதியின் ஒளி விளக்குகள் அணைக்கப்பட்டு, பச்சை நிறசட்டை போட்ட இரவு விளக்குகள் மட்டும் மங்கிய ஒளியைச் சிந்தத் தொடங்கி விடும். ஒருவர் பின் ஒருவராக, ஒரு சில படுக்கைகளைச் சுற்றிச் சிறு சிறு குழுக்கள் கூடிவிடும். அவற்றில் உலகப் பட்டறிவுப் பெட்டகங்களாக களவு கொலை, களவு சூது வாது, பெண் இன்பம், வானியல், சோதிடம், சூனியம், மருத்துவம் போன்ற துறைசார் போதனைகளைச் செய்யும் பேராசிரியர்களைச் சந்திக்க முடியும்.

உண்மையாகவே அவற்றை அவன், இன்று உலகப் பல்கலைக் கழகமாக பார்க்கிறான். இன்று எங்கள் கைகளில் இருக்கும் 'சிமாட்' போன்களும், இணையத் தளங்களும், கணிணிகளும் இல்லாத காலம் என்பதை நினைவில் கொண்டால், இந்தக் குழுக்களின் சிறப்பையும், முக்கியத்தையும் அறிய முடியும். இருந்தும் கூட அங்கும், 'டேய் சின்னப் பொடியா... நீ போய்ப் படு" என்று அன்புக் கட்டளை போடும் அக்கரை கொண்ட பெரியவர்களும் இருக்கத்தான் செய்தனர்.

பெரியவர்களால், சிறுவர்கள் கெடுக்கப் படுகிறார்கள் என்ற சமூக அக்கறை கொண்ட அவர்களின் கட்டளைகளை மீறக் கூடாது

என்கிற புரிதலும், அவ்வப்போது அவனைப் படுக்க வைத்து விடும். ஆனால், பூராய வெறி சாராய வெறியை விட மோசமானது என்பதை, அவன் அனுபவ பாடமாகத் தெரிந்து கொண்டான்.

அந்த விடுதியில் பால்வினை நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் அந்தரங்க உறுப்பு, இரண்டாவது தடவையாகத் துண்டிக்கப் பட்டிருந்த நாட்கள் அது. முன்பும் ஒரு தடவைத் துண்டிக்கப்பட்டவர். அதனால் அவரோடு சிறப்பு நேர்காணல்களும், அவரது திருவிளையாடல் அனுபவங்கள், ஏன் மீண்டும் அதே தவறைச் செய்தார்? என்பன போன்ற வாதப் பிரதிவாதங்களும், இன்றைய தொலைக் காட்சிப் பட்டி மண்டபங்களை ஒத்த காட்சிகள் இடம் பெற்றன.

இவை, ஆண்-பெண் இன்பம் தொடர்பான பலரின் அனுபவங்களை அலசி, ஆய்வுகள் செய்யும் அரங்குகளாகவும் இருக்கும். அப்படியான ஒரு ஆய்வின் முடிவில் எமது கதாநாயகன், யாழ்ப்பாணம் திரிகோணமலை பேருந்துச் சேவையில் ஓட்டுநராகப் பணி செய்தவர் என்பதும், அவருக்கு பல இரவுகள் வெளியில் தங்கும் வாழ்க்கை என்பதால், விதம் விதமான விருந்துகளைச் சுவைக்கும் ஆசை அதிகமானது.

அதனால் பால்வினை நோய்கள் அவருக்கு நன்கு பழக்கப்பட்ட விவகாரம். இப்பொழுது உள்ளது போல் சிறப்பான ஊசி மருந்துகள் இல்லாத காரணத்தால், அறுவடை ஒன்றுதான் அன்று கைவந்த மருத்துவமாக இருந்தது. எனவே, முதலாவது அறுவடை முடிந்த சில மாதங்களிலேயே அவர், இரண்டாவது அறுவடைக்காக அதே மருத்துவமனை, அதே மருத்துவ விடுதி, அதே மருத்துவ தாதியர். அவருக்கு பழக்கமான இடமும், ஆட்களும் என்பதால் பலரது விகடப் பேச்சுகளுக்கும், இரட்டை அர்த்த விமர்சனங்களும் அவருக்குப் பழகிப் போன சமாச்சாரங்கள்.

தமது அடக்க முடியாத பெண்ணாசையை மறைக்க முடியாதவராயும், அதனைத் தமது சிறப்புத் தகமையாகவும் பேசுவார். ஆனால், அவை எல்லாம் அவனுக்கு ஆழமான பயத்தையும், பெண்களுடன் பழக நினைப்பதே ஆபத்தானது என்கிற புரிதலையும், ஆழ் மனதில் பதிய வைத்து விட்டன. ஆயிரம் புத்தகங்கள் செய்ய முடியாத மனப் பக்குவத்தை, இந்த அனுபவம் கொடுத்தது. இந்தப் படிப்புத்தான் பிற்காலத்தில் அவன் வாலிப வயதை எச்சரிக்கையோடு, பலரின் கேலிப் பேச்சுகளுக்கும் இடமளித்து, தடம் புரண்டு போகாமல் நேர் வழியில் நடை போட உதவியது.

**(வருவான்)**




# V one DISTRIBUTION

**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

Handy Verträge ab 1,- €
Handy Zubehör
Handys
Handy Reparatur
Festnetz DSL
Prepaid SIM
Prepaid Guthaben

KFZ Gutachten
Passbilder
Event Fotos& Videos

Privat Kredit

Handy Versicherung
KFZ Versicherung
Haftplicht Versicherung
und vieles mehr...

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
MoneyGram
unitymedia
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
1&1
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T · · Mobile ·
O2
otelo

சண் தவராஜா



# சொந்தச் சகோதரதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு....

ஏப்ரல் 21இல் சிறிலங்காவில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் சிங்களப் பேரினவாதத்தின் கோர முகத்தை மற்றொரு தடவை வெளிச்சம் போட்டுக் காட்டியது மட்டுமன்றி, தமிழ்த் தேசியவாதிகள் எனத் தம்மை அடையாளப் படுத்திக் கொள்வோர் எத்தகைய மோசமானத் தமிழ் இனவாதிகள் என்பதையும் அடையாளம் காட்டியிருக்கின்றது. அத்தோடு, சமத்துவம் பேசும் அவர்கள் எத்தகைய பிற்போக்குவாதிகள், ஆணாதிக்கவாதிகள் என்பதையும் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றது.

அதேவேளை, முஸ்லிம்கள் வரலாறு காணாத அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி இருக்கின்றனர். வெளியே தெரியா விட்டாலும், ஊடகங்களில் செய்திகள் வெளிவரா விட்டாலும் குறிப்பாக தென்னிலங்கையில் முஸ்லிம்களின் அன்றாட அலுவல்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. வர்த்தகத்தைப் பெரிதும் நம்பி வாழும் அந்த மக்களின் வருமானம் அதலபாதாளத்திற்குச் சென்றிருக்கின்றது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவிற்கு வந்ததன் பின்னான சூழலில் ‘சிங்களப் பேரினவாதம் அடுத்ததாக முஸ்லிம் மக்களைக் குறிவைக்கும்’ என்ற ஆரூடங்கள் முன்வைக்கப் பட்டிருந்தன. அரசியல் ஆய்வாளர்களும் கூட, கடந்த கால வரலாறுகளை மேற்கோள் காட்டி இத்தகைய எதிர்வு கூறல்களை முன் வைத்திருந்தனர்.

அதற்கு ஏற்றாற் போல சிங்களத் தீவிரவாத அமைப்புக்களான பொதுபலசேன, ராவணபலய போன்ற அமைப்புக்கள் இடைக்கிடையே முஸ்லிம்

GENERALI



**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
☎ 058 473 24 45    058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch
076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
### EINKOMMENS - VERSICHERUNGEN
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
### SPARVERSICHERUNGEN
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
### LEBENSVERSICHERUNGEN
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
### FAHRZEUGEVERSICHERUNGEN
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
### HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
### RECHTSSCHUTZVERSICHERUNG
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
### KRANKEN & UNFALLVERSICHRUNGEN
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி



### வீட்டுக்கடன்
### HYPOTHEKEN
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

# உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கான ஒரே இடம்

044 803 47 47
078 300 90 90



- Airport Transfer
- VIP Service
- Limousine
- Reisebusse
- Kleinbusse
- Gruppen-Transfer

SWISS RENT A CAR SRAC

**Swiss Rent a Car GmbH**
Schaffhauserstrasse 137
8302 Kloten

www.swissrentacar.ch



## அனைத்து வாகனத் திருத்த வேலைகளுக்குமான ஒரே இடம்

- Reifenwechsel
- Auto Diagnostik
- Karosserie
- Klimaservice
- MFK Bereitstellung
- Bremse und Stossstange
- Autoradio Montage
- Reinigung und Polieren
- Sonstige Reparaturen
- Ersatzwagen

KGS

Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02

மக்களுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டன. இவை சிறிய சம்பவங்களாகக் கருதப்பட்டு அவ்வப்போது-உள்நாட்டு, வெளிநாட்டு - கண்டனங்களுக்கு உள்ளாகி மறக்கப்பட்டு விட்டன.

ஆனால், ஏப்ரல் 21 சம்பவங்கள் ஏற்படுத்திய உயிர்ச்சேதங்கள், நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், அரச உயர்மட்டத்திற்குத் தாக்குதல்கள் பற்றித் தெரிந்திருந்த போதிலும் அவற்றைத் தடுக்கத் தவறிய அரசின் அசமந்தம் போன்றவை மாதங்கள் கடந்தும் பேசுப் பொருளாக மாறியுள்ளன.

வாய்ப்புக்காகக் காத்திருந்த சிங்களப் பேரின வாதம் ஏப்ரல் 21 தாக்குதல்களை சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டது. இதில் விநோதம் என்னவென்றால் தமிழ் இனவாதிகளும் அவர்களோடு கைகோர்த்துக் கொண்டதே. சில இடங்களில் தமிழ் இனவாதிகளின் கருத்துகள் சிங்கள இனவாதிகளின் கருத்துகளை விடவும் ஓங்கி ஒலித்ததை அவதானிக்க முடிந்தது. போகின்ற போக்கில் தங்கள் நீண்டநாள் அபிலாசைகளையும் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்னும் பாணியில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு சில காய் நகர்த்தல்களையும் - குறிப்பாக கிழக்கில் - அவதானிக்க முடிந்தது.

அச்சத்தையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்ட முஸ்லிம் சமூகம் சுதாகரித்துக் கொள்வதற்கு முன்பாகவே சுற்றி வளைப்புகள், கைதுகள், துன்புறுத்தல்கள், வசைபாடல்கள், புறக்கணிப்புக்கள் என அடக்கு முறைகள் நீண்டு செல்கின்றன. இதில் புதிதாக, முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் பதவி விலக வேண்டும் என்ற கோசம் வேறு. 'ஒருவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டால் விசாரணையில் அவர் குற்றவாளி எனக் கண்டறியப்படும் வரை அவர் நிரபராதியே' என்ற பொதுப்புத்தி கூட இல்லாமல் சகட்டுமேனிக்கு அவதூறுப் பிரசாரங்கள் முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன், முன்னாள் ஆளுநர்களான எம்.எல்.ஏ.எம்.



ஹிஸ்புல்லாஹ், அசாத்சாலி ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்டன.

பதவி விலகக் கோருவோரில் ஒருவரால் கூட குறிப்பிட்ட அரசியல் வாதிகள் தொடர்பில் உருப்படியான, ஆதராங்களுடன் கூடிய முறைப்பாடுகளை முன்வைக்க முடியவில்லை. மறுபுறம், தங்கள் விசாரணைகளில் குறிப்பிடப்பட்ட நபர்கள் தொடர்பிலான குற்றங்கள் எவையும் கண்டறியப் படவில்லை எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவும் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில் குற்றச்சாட்டுக்கு ஆளான முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டுமன்றி சிறிலங்கா அரசாங்கத்தில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் அனைவருமே ஒட்டுமொத்தமாகத் தமது பதவிகளைத் துறந்துள்ளார்கள். இந்தச் செயற்பாட்டின் ஊடாக, 'சிறிலங்காவில் தற்போது நடைபெற்று வரும் செயற்பாடுகள் யாவும் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்திற்கே எதிரானவை' என்ற சேதியைப் பதிவு செய்துள்ளார்கள்.

தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகளை மேற்குலகம் மாத்திரமன்றி, இஸ்லாமிய உலகமும் அவதானித்து வருகின்றது. மேற்குலகின் செல்லப் பிள்ளைகளாக பலம் பொருந்திய சவூதிஅரேபியா போன்ற நாடுகள் இருக்கையில் அவை நினைத்தால் சிறிலங்கா மீது பாரிய அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும் என்பது நினைவிற்

கொள்ளத் தக்கது.

தமிழர்களைக் கொன்றொழித்து விட்டு விசாரணைகள் கூட இல்லை என இறுமாப்போடு சொல்லும் சிறிலங்கா அரசாங்கம் முஸ்லிம்கள் விடயத்தில் அவ்வாறு சொல்லித் தப்பித்து விட முடியாது. எனவே, முஸ்லிம்கள் மீதான கெடுபிடிகள் குறையாது விட்டால் கிட்டிய எதிர்காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் பன்னாட்டுச் சமூகத்திடம் இருந்து நெருக்கடிகளை எதிர்நோக்கியே ஆக நேரிடும்.

முஸ்லிம்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் விடயத்தில் தமிழ்க் கட்சிகள் மிக நிதானமாக நடந்து கொண்டமை பாராட்டத்தக்கது. 1915 இல் சிங்களப் பேரினவாதத்தின் தாக்குதல்களுக்கு முஸ்லிம்கள் இலக்காகினர். இது தொடர்பில் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டிருந்த சிங்களத் தலைவர்களை மீட்டு வரத் தமிழரான சேர் பொன் இராமநாதன் பிரித்தானியா வரை சென்று வாதாடி சிங்களத் தலைவர்களை மீட்டு வந்தார்.

கொழும்பு வந்த அவரை, குதிரை வண்டியில் அமர வைத்து, குதிரைக்குப் பதிலாகத் தாமே வண்டியை இழுத்துச் சென்று சிங்களத் தலைவர்கள் தமது நன்றி விசுவாசத்தை வெளிக்காட்டிக் கொண்டனர். (1888ஆம் ஆண்டில் ‘இலங்கைச் சோனகர் இன வரலாறு’ என்ற தலைப்பில் சேர் பொன் இராமநாதன் எழுதிய ஆய்வுக் கட்டுரையில், ‘‘ஆரம்பத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினருடனான ஒன்று கலப்பின் மூலமே முஸ்லிம் இனம் பெருகியது’’ எனக் கூறியிருந்தமை முஸ்லிம் சமூகத்தின் கடும் கண்டனத்துக்கு ஆளாகி இருந்தமை தனிக்கதை.)



சேர் பொன் இராமநாதன்

1883, 1915 என வரலாற்றில் இரு தடவைகள் நடைபெற்ற முஸ்லிம் மக்களுக்கு எதிரான சிங்கள பௌத்த வன்முறைகளின் போதும், அப்போதைய தமிழ்த் தலைவர்கள் சிங்கள தேசத்துடனேயே தங்களை அடையாளப் படுத்தியதை முஸ்லிம்கள் இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால், இன்று வரலாறு திரும்பியிருக்கின்றது. தாம் அனுபவித்த துன்பங்களை மற்றொரு இனம் அனுபவிக்கக் கூடாது என்பதில் - ஆகக் குறைந்தது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களாவது உணர்ந்திருக்கின்றார்கள் என்பது மிகப்பெரிய ஆறுதல்.

‘சிறிலங்காவில் வாழும் அனைத்து முஸ்லிம் மக்களும் மோசமானவர்கள். அவர்கள் எத்தகைய மோசமான நிலையைச் சந்தித்தாலும் பரவாயில்லை: இறந்தால் கூடக் கவலையில்லை’ என மனதுக்கு உள்ளே நினைக்கும், வெளிப்படையாகப் பேசும் கணிசமான தமிழர்களை(?) மாவீரர் கல்லறைகளில் உறங்கும் முஸ்லிம் மாவீரர்களின் ஆன்மாக்கள் மன்னிக்காது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தரப்பில் தவறில்லை என்றல்ல. அவர்கள் தரப்பில் எண்ணிக்கையில்லாதத் தவறுகள் இருக்கின்றன. ஆனால், இது பழைய கணக்குகளைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பம் அல்ல என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளுதல் நல்லது.

அதேவேளை, தமிழ் மக்களுடனான எதிர்கால உறவு தொடர்பில் முஸ்லிம் தலைவர்கள் தமது நிலைப்பாட்டை இதய சுத்தியுடன் மறுபரிசீலனை செய்ய வேண்டிய தருணம் இதுவே என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

ENESAR
N.S.R.

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்







**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
**NSR** தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**



# என்ன கொடுமை சரவணா!...

கல்லெலி வேலுப்பிள்ளை



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. கால் போன போக்கிலே மனம் போகலாமா, மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா என்றொரு பாட்டு இருக்கு கண்டியளோ. அந்தப் பாட்டு எங்கட சனத்துக்காகவே பாடினது மாதிரி இருக்கு கண்டியளோ. ஏனெண்டால் பாருங்கோ உலகம் முழுதும் பரந்து வாழ்ந்தாலும், இதுவரைக்கும் நாட்டைப் பறிகொடுத்திட்டு வாழுற ஆக்களாவே இருக்கிறமல்லே.**

அதைத்தான் சொன்னான் பாருங்கோ. ஒருத்தருக்கொருத்தர் ஒற்றுமை இல்லாமலும், மற்றவரை அடிச்சுத் தின்னுற ஆக்களாகவும் இருக்கிறதால, நாங்கள் உருப்பட வாய்ப்பே இல்லை கண்டியளோ. போட்டி இருக்கவேணும், அது ஆரோக்கியமானது ஆனால் பொறாமை இருக்கல்லோ அது மிகக் கேவலமானது. அடுத்தவனுக்குச் சேரவேண்டிய உழைப்பையோ பொருளையோ இடையில நிண்டு அடிச்சுத் தின்னுற ஆக்கள் எங்கட இனத்தில இப்ப கூடிப்போச்சுக் கண்டியளோ.

விசயம் என்னெண்டா பாருங்கோ, ஊரில இருக்கிற எங்கட ஆட்களுக்கு இப்பவெல்லாம் சொகுசு கூடிப்போச்சுக் கண்டியளோ. அங்க இருந்துகொண்டு அவை கேக்கிற தொகையள் எல்லாம் கோடிக்கணக்கிலதான் இருக்குப் பாருங்கோ. வெளிநாட்டில இருக்கிறவன் என்ன செய்யுறான், எவ்வளவு கடினமான வாழ்க்கை வாழுறான் எண்டெல்லாம் அவை யோசிக்கிறதில்லை.

கண்ணை மூடிக்கொண்டு காசு கேக்கிறதில அப்பிடி ஒரு மேதாவித்தனம் பாருங்கோ. அப்பிடித்தான் பாருங்கோ கிட்டடியில என்னுடைய நண்பருக்கு நேர்ந்த அனுபவத்தைக் கேட்டு நான் திகைச்சுப்போனன் பாருங்கோ. அந்தாளுக்கு மாரடைப்பு வராத குறை கண்டியளோ. எல்லாம் ஊரில ஒரு நல்ல விசயத்தைச் செய்யவேணும் எண்டு முனைப்பிலயும் ஆர்வத்திலையும் அவர் செய்த பணிக்குக் கிடைச்ச சன்மானம் ஏமாற்றம் தான் பாருங்கோ.

என்ன நடந்ததெண்டாப் பாருங்கோ, தாயகத்தில இருக்கிற ஒரு கிராமத்தில தண்ணீர் வசதி நிறைவாக இல்லாமல் இருந்திருக்கு கண்டியளோ. இவர் ஊருக்குப் போய் வந்த நேரத்தில அதைப் பார்த்து மிகவும் கவலைப்பட்ட நிலையில இஞ்ச வந்து அதுக்கொரு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேணும் எண்டு கடுமையா முயற்சி செய்திருக்கிறார். அதன் விளைவாக அதற்குரிய பணத்தையும் சேர்த்து ஊருக்கு அனுப்பி அங்க உள்ள நபர்கள் மூலம் ஒரு இடத்தை வாங்கி, அதிலேயே கிணறும் வெட்டி, பக்கத்திலேயே நீர்த்தாங்கி ஒண்டும் கட்ட முயற்சி எடுத்திருக்கிறார்.

ஏன் நீர்த்தாங்கி எண்டால், பக்கத்தில இருக்கிற பள்ளிக்கூடம் ஒண்டில மாணவர்கள் தண்ணீர் வசதி இல்லாமல் பெரும் பாடு படுகினம் எண்ட செய்தியும் ஆளுக்கு எட்டியிருக்கு. அதை நேரில பார்த்தும் அறிஞ்சிருக்கிறார். காசு அனுப்பினபிறகு தானே நேரில போய் நிண்டு அந்த வேலையை நெறிப்படுத்திச் செய்வம் எண்டு யோசிச்சிருக்கிறார். ஊரில இருந்து வந்து இப்ப வெளிநாடுகளில உள்ள நண்பர்கள் எல்லாரட்டையும் விசயத்தைச் சொல்லிப் பணமும் சேர்த்து அனுப்பத் தயாரான வேளையில தான் ஆளுக்கொரு புது நெருக்கடி வந்திருக்கு கண்டியளோ.

என்னவெண்டால், ஊரில இவர் பார்த்து வைச்சிட்டு வந்த இடம் இருக்கல்லே, அந்த இடத்தை வேறொரு ஆள் அதிக பணம் கொடுத்து வாங்க முயற்சி எடுத்திருக்கிறார். விக்குறவருக்குப் பெரிய சங்கடமாப் போச்சுக் கண்டியளோ. ஏனெண்டால் இவருக்கு வாக்குக் கொடுத்திட்டன் என்ற சங்கடம்தான். ஆனால் புதுசா வாங்க வந்தரோ அரசியல் பின்னணி உள்ளவர். இப்ப அங்க "சுத்து மாத்து" பண்ணுற ஆக்களோட ஆளுக்கு நல்ல தொடர்பிருக்கு. அவர் ஏன் வாங்கப் போறார் எண்டு கேட்டியள் எண்டா உங்கட தலையில நீங்களே அடிக்கவேண்டி வரும் பாருங்கோ.



என்னெண்டா பாருங்கோ புதுசா ஒரு ஆஞ்சநேயர் கோயில் கட்டுறதுக்கு இந்தியாவில இருந்து ஆரோ ஒருத்தர் கேட்டதாகவும், அந்த வேலையை இந்த அரசியல் பின்னணி உள்ளவர் எடுத்துச் செய்தால் நல்ல இலாபம் ஈட்டலாம் எண்டதும்தான் காரணம் பாருங்கோ.

தன்னுடைய காணியை நீர்த்தாங்கி கட்டுறதுக்கு வெளிநாட்டில உள்ள ஒருத்தருக்குத் தாறதா நான் வாக்குக் கொடுத்திட்டன் எண்டும், அதைத் தன்னால மீற முடியாதெண்டும் அந்தக் காணிக்காரர் புதுசா வந்த அரசியல் பின்னணியிட்டச் சொல்லி இருக்கிறார். முதல் தரம் அமைதியாகக் கேட்டுக்கொண்டு போன அரசியல் பின்னணி,இரண்டாம் தரம் சந்திக்க வந்திருக்கிறார். வந்த நேரம் ஆள் தனிய வரேல்லை கண்டியளோ. இரண்டு மூன்று பேரையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார். ஆள் இரண்டாம் தரம் வரேக்கையே இது ஏதோ வில்லங்கமாய்த்தான் முடியப்போகுது எண்டு காணிக்காரருக்குத் தெரிஞ்சிட்டுது பாருங்கோ.

அந்த வெளிநாட்டுக் காரரின்ர தொடர்பை ஒருக்காத் தனக்குத் தர ஏலுமோ எண்டு கேட்டிருக்கிறார் பாருங்கோ. நான் அவரிட்ட ஒருக்காக் கேட்டுட்டுத் தான் தரமுடியும் எண்டு இவர் சொல்ல, அரசியல் பின்னணி கடுப்பாயிட்டுதாம் பாருங்கோ. அந்த அளவுக்கு அவர் எந்த நாட்டின்ர பிரதமர் எண்டு ஆள் முனகியிருக்கு. அப்பிடியெல்லாம் இல்லை, அவரிட்ட கேக்காமல் தர ஏலாது தானே எண்டு காணிக்காரர் சொல்ல, நாங்கள் எடுக்கிற மாதிரி எடுக்கிறம் எண்டு சொல்லிட்டு ஆள் போயிருக்கு.

போனதும் பத்தாமல், மறுநாளே ஆள் என்னசெய்தது தெரியுமே பாருங்கோ..? காணி சம்பந்தமாக ஒரு பொய் வழக்கு எழுதி ஒரு சட்டவாளரை வைச்சு காணிக்காரருக்கு கடிதம் அனுப்பியிருக்கு. காணிக்காரருக்கு அடியும் விளங்கேல்லை நுனியும் விளங்கேல்லை. ஒரு நல்ல விசயத்துக்குப் பயன்படட்டும் எண்டுதான் அவர் காணியையே நீர்த்தாங்கி கட்டுவதற்காக விற்கச் சம்மதித்தவர் பாருங்கோ. இல்லையெண்டால் அது விற்கவேண்டிய







தேவையே அவருக்கு இல்லை. கிராம மத்தியில உள்ள அந்த இடம் இன்னும் பத்துவருசம் போக வித்தால் நல்ல பெறுமதிக்கு விற்கலாம் எண்டது அவருக்கு தெரியாதே என்ன சொல்லுங்கோ பாப்பம்.

கடிதம் வந்த உடனே யார் வழக்குத் தொடுத்தவர் எண்டு பார்த்தால் அது யாரோ முன்பின் தெரியாத ஆளின்ர பெயரோட இருந்திருக்கு. இதென்னடா புது வியாதி எண்டு குறித்த நாளுக்கு நீதிமன்றம் போனால் பாருங்கோ, வழக்குப் போட்டவர் உடல்நலம் சரியில்லை எண்டு வரேல்லையாம். இரண்டாம் முறை மனைவி வைத்தியசாலையில எண்டு வரேல்லையாம். மூன்றாம் தவணைக்கும் ஏதேதோ காரணம் எண்டு இப்ப வழக்கு ஒருவருசமா இழுபடுது கண்டியளோ.

வழக்காளியின்ர முகவரியில போய்ப்பார்த்தால் அங்கே வெறும் காணி ஒன்றுதான் இருக்குதாம். எங்கட ஆளுக்குத் தலைசுத்த வெளிக்கிட்டுட்டுது பாருங்கோ. விசாரிச்சுப் பார்த்தால், கோயில் கட்ட அது தான் சரியான இடம், அதை விட்டால் வேற இடம் கிடைக்காது எண்டு சுத்துமாத்து அரசியல் பிரமுகரிட்ட ஆரோ போட்டுவிட, அவர் தன்னுடைய பெருந்தன்மையையால விளையாடுறார் கண்டியளோ.

இப்ப என்னடா எண்டால், உப்பிடியே இழுப்பட்டால் காணியில நீர்த்தாங்கி கட்டவோ, விற்கவோ இயலாமல் காணிக்காரர் தங்கட பக்கம் பணிவார் எண்டுறது அரசியல் பிரமுகரின்ர எண்ணம். அப்படியே தமிழகக் கட்டப்பஞ்சாயத்து மாதிரியே இல்லையே பாருங்கோ. எப்பிடியெல்லாம் எங்கட ஆக்கள் யோசிக்குறாங்கள் எண்டதுக்கு இதைவிட ஒரு உதாரணம் வேணுமே யோசிச்சுச் சொல்லுங்கோ பாப்பம்?

எட கட்டையில போவாரே, ஒரு கிராமத்துக்கும் பள்ளிக்கூடத்திற்கும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக்கொடுக்க முயன்றது எங்கட நண்பரின்ர குற்றமா...? அல்லது அந்தக் காணியை நல்ல நோக்கத்துக்காக விற்க முயன்றது அந்தக் காணிக்காரரின்ர குற்றமா ? இதில எதடா குற்றம்..? உங்கட அரசியலை மக்களின்ர வயித்தில அடிச்சுக் காசு பாத்துத்தான் நடத்த வேணும் எண்டால், உதவிட வேற பிழைப்பு ஏதும் செய்யலாம் தானே கொள்ளையில போவாரே..!

நீங்கள் நாசமாத்தான் போவியள் பாருங்கோ. உங்கட பிள்ளையளை இந்தியாவிலையும், அவுஸ்திரேலியாவிலையும் படிக்க

விட்டுட்டு, ஊரில உள்ள பிள்ளைகளை வாழ விடாமல் செய்யுற கொடுமை உங்கட பரம்பரையையே சும்மா விடாது பாருங்கோ. இப்ப என்னுடைய நண்பர் ஊருக்குப் போகவே பயப்பிடுறார் கண்டியளோ. அதோட சும்மா இருந்த மனுசனை வழக்கு வம்பு எண்டு தான் மாட்டிவிட்டுட்டதாகக் குற்ற உணர்ச்சி வேற.., இதெல்லாம் எங்க போய்ச் சொல்லி, எங்க நியாயம் தேடுறது எண்டு தெரியேல்லை எண்டு சொல்லி மனிசன் கண்ணீர் சிந்திச்சுது பாருங்கோ.

விடுதலைப் புலிகளின்ர ஆட்சி இல்லாமல் போனதின்ர விளைவுகள்தான் இதெல்லாம் பாருங்கோ. அடிபிடி கத்திக்குத்து எல்லாத்தையும் விட, அரசியல் விபச்சாரப் பிரமுகர்களின்ர தொல்லை ஊரில இப்ப தாங்க முடியேல்லை கண்டியளோ. சந்தையில இருந்து சாவீடு வரைக்கும் அவையின்ர கையசைப்பு இல்லாமல் எதுவும் இயங்கமுடியாத காலம் அங்க வரப்போகுது. அதுக்கெண்டு அடியாட்களையும் உருவாக்கி வைச்சிருக்கினமாம்.

அவைக்குத்தானே இலங்கை அரசின்ர முழுப் பாதுகாப்புமே இருக்குது பாருங்கோ. பிறகேன் பயப்படவேணும்..? ஆனால் ஒன்று மட்டும் தெளிவு பாருங்கோ.. எல்லாத்தையும் பார்த்துக்கொண்டு சனம் பொறுத்துக் கொண்டு இருக்கும் என்று மட்டும் நினையாதேங்கோ.. ஒரு நாள் திரும்பவும் புரட்சி வெடிக்கும்போது நீங்கள் எல்லாம் தலைகால் தெரியாமல் ஓட வேண்டி வரும் சொல்லிப் போட்டன்.

**சித்தர்களும் யோகிகளும்**
**சிந்தனையில் ஞானிகளும்**
**புத்தரோடு ஏசுவும்**
**உத்தமர் காந்தியும்**
**எத்தனையோ உண்மைகளை**
**எழுதிஎழுதி வச்சாங்க**
**எல்லாந்தான் படிச்சீங்க**
**என்னபண்ணிக் கிழிச்சீங்க?**

**- அப்ப வரட்டே**



Sweet Chilli
www.sweetchilli-do.de
Original Srilankisches & Indisches Restaurant
CELEBRATION 9th ANNIVERSARY
100% Halal 100% Frisch 100% Naturgewürze 100%Naturkräuter
இலங்கை பிரியாணி (ஓரிஜினால்) கொத்து ரொட்டி, இடியாப்ப கொத்து,
புட்டுக் கொத்து, தோசை, மட்டன் றோல், பற்றிஸ் மற்றும்
ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ் கறி, கோழிக் கறி, அத்துடன் இந்திய உணவு
வகைகள், அறுசுவைமரக்கறிகளுடன் சுவைத்திட நானா கடை


தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை
எமது ஸ்தாபனத்தின் புதிய கிளை நிறுவனம்
Hagen நகரில் (am HauptBahnof-10 / 58089 Hagen)
Tel : 02331 3411355 Mob : 0152 22 67 82 12
Rheinische str.60- 44137 Dortmund Tel : 0231 315 46 84
பிரியாணி பல வகையில்
பல விலைகளில்
செய்து கொடுக்கப்படும்

பிறந்த தினக் கேக் அழகாக செய்து கொடுக்கப்படும்
உருசியையும், தரத்தையும் விரும்புபவர்கள்
Tel : 0231 315 46 84
By. Hanafi Nana

CENTURY
TRAVELS GMBH

Emirates

Emirates Sommer 2018

SRILANKA -COLOMBO

Direct Booking Nr.: 017621682149

ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச் சலுகை

2019ம் ஆண்டின் கோடைகால
முன்பதிவுகள் ஆரம்பம்

Juli-2019 ab599€



அங்கத்தவர்களாக இணையும்
வர்த்தகர்களுக்கு
விசேட சலுகை (வி.ஐ.பி) உண்டு.

தொடர்புக்கு 0176 216 82 149
(Gültig nur mit gewerbe ammeldung)

Ram Nishanthan Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal

web : www.centurydravels.de email : info@centurytravels.de

ஒருவருட Lebara Play அன்பளிப்பு

5 விமானச் சீட்டுகள் வாங்கினால்
ஒரு வருட Lebara Play நீடிப்பு (Renewal)
கூப்பன் அன்பளிப்பாக வழங்கப்படும்

**Niederlassung**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
0231 58 96 557
0201 64888225
Fax : 0231 58 44 665

**Hauptsitz**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.30 முதல்
மாலை 3:30 திறந்திருக்கும்


LIMRA BAGS PVT LTD
No.14A, Pensioner st, Tennur, Trichy - 620 017, Tamil Nadu, INDIA.
www.limrabags.in | 97861 14635 | 1800 121 123455
Managing Director
Sadik Basha. M
Lezer
For everyone of the world
CARLTON